# ஆந்திராவில் ஐந்து இடங்களில் பொலிசார் சுட்டனர்

Registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU
National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 11
இதழ்: 113
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் வைகாசி 22 ரபி;அவ் 18 புதன்கிழமை [4-6-69]

## தெலிங்கானா கிளர்ச்சி மேலும் நால்வர் பலி

ஹைதராபாத், ஜூன் 3
தெலிங்கானா தனிராஜ்யக் கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்காக இன்று ஆந்திராவில் பல இடங்களில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேர்ந்தது.

ஐந்து இடங்களில் இன்று நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் நால்வர் கொல்லப்பட்டனர்; ஆறு பேர் காயமடைந்தனர். இன்று நடந்த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக ஹைதராபாத்திலும் செகந்திராபாத்திலும் இராணுவம் அழைக்கப்பட்டிருந்தது. ஆயினும் வெளியிடங்களில் சாலைகளைத் தடுத்தும் மறியல் செய்தும், பொலிசார் மீது கல்வீசியும் ஆர்ப்பாட்டமும் கிளர்ச்சியும் செய்த தெலிங்கானா கிளர்ச்சிக்காரர் கலகம் செய்தனர். இதைத் தொடர்ந்தே பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

(3-ம் பக்கமும் பார்க்க)

### தற்கொலை முயற்சி

யாழ்ப்பாணம், செவ்.
நச்சுத்திராவகம் அருந்திய இரண்டு வாலிபர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அரியாலையைச் சேர்ந்த வல்லிபுரம் அமிர்தலிங்கம், கொக்குவில மேற்கைச் சேர்ந்த எஸ். இராசையா ஆகிய இரு வாலிபர்களுமே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் (கா. நி)

# சிங்களப் போதனா மொழியை தடுக்க நீதிமன்ற நடவடிக்கை

## முன்னாள் அமைச்சரும் மற்றும் சிலரும் முயற்சி

கொழும்பு, செவ்வாய்
வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள மூன்று பௌத்தபாடசாலைகளிலும் இனியும் பொறுப்பேற்க உத்தேசித்திருக்கும் வடபகுதியிலுள்ள இரண்டு பௌத்தபாடசாலைகளிலும் சிங்களத்தைப் போதனாமொழியாக்கும் முயற்சியைத் தடுப்பதற்காக முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் கியூ.ஸி.யும்மற்றும் வழக்கறிஞர் சிலரும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்வதற்கானமுயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

மூன்றுபௌத்தபாடசாலைகளிலும் இப் பொழுது உள்ளதுபோன்றே தமிழ்மொழியேபோதனாமொழியாக இருக்கும் நிலையில் அந்தப்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள போதிலும் பெற்றோர் விரும்பினால் சிங்கள மொழி மூலம் பாடபோதனையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளதைத் ...

இந்தப்பாடசாலைகளில்கல்வி பயிலும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவர்களின் தாய் மொழியல்லாத பிற மொழி மூலம் கல்வி போதனையளிப்பதற்காக நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்கு இடைக்கால உத்தரவை கல்வி அமைச்சருக்குப் பிறப்பிக்கும் [illegible] இவர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடமுன் வந்துள் ...

### தமிழ் மக்களின் நிலைபற்றி உரை

யாழ்ப்பாணம், புதன்
இன்றைய அரசியலும் தமிழ்மக்களின் நிலையும் என்னும் விடயம் பற்றி இன்று மாலை சினக் ம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் திரு.என். சண்முகதாசன் யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் பேசு ...

## அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரசுவேட்பாளர்கள் யார்

### கட்சி சுறுசுறுப்பு

கொழும்பு, திங்
அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலையில் தமிழரசுக்கட்சி தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கென இம்மாதம் 6-ம் திகதி தேர்தல் குழு மூதூருக்கும், 7-ம் திகதி திருக்கோணமலைக்கும் 10-ம் திகதி மன்னாருக்கும் செல்லவிருக்கிறது.

நல்லூர்த் தொகுதியில் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனை நிறுத்துவதென்பது நிச்சயமாகிவிட்டதென்றும் தீவுப்பகுதி கிளிநொச்சிமன்னார், மூதூர் திருகோணமலை தொகுதி முடிவுகளில் பிரச்னை இருப்பதாகவும்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

### தந்தைகொலை; மகன் கைது

கோட்டை, திங்கள்
தாயும் தந்தையும் சச்சரவு பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அதைக் கண்டு ஆத்திரமடைந்த மகன் தந்தையைக் கத்தியால் கழுத்தில் வெட்டிக்கொலை செய்தாராம். இச்சம்பவம்டெலிகொட என்னுமிடத்திலுள்ள பலிபொன குடியேற்றத் திட்டத்தில் நடைபெற்றுள்ளது.

தாய்க்கும் தந்தைக்குமிடையே பணப் பிரச்னை காரணமாக வாக்குவாதம் நடந்ததாகவும் அதைத் தொடர்ந்து தந்தை தாயாரை அடித்ததாகவும் கூறப்படுகிறது. தந்தை ...



## சம்பளமின்றி கடமையாற்ற ஆசிரியர்கள் சம்மதம்

யாழ்ப்பாணம், செவ்
இம்மாதம் 1-ம் திகதிஅரசினரால் பொறுப்பேற்கப்பட்ட வடபகுதியில் உள்ள 3 பௌத்த பாடசாலைகளிலும் இதுவரைகாலமும்கடமையாற்றி வந்த சுமார் 30 ஆசிரியர்கள் சம்பளம்இன்றி கடமையாற்ற முன்வந்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக கல்வி அமைச்சிடமிருந்து குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு கிடைத்மிள்ள அறிவித்தலொன்றில் இவர்களை அரசாங்க சேவையில் நியமிப்பது சம்பந்தமாக எதுவித முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லையென்றும், சம்பளமின்றி வேலைசெய்ய விரும்பினால் தொடர்ந்து கடமையாற்றும்படியும் தெரிவிக்கப் பட்டிருந்ததே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப் படமுன்னர் இப் பாடசாலைகளில் கடமையாற்றி வந்த சுமார் 30 ஆசிரியாகளும் அரசாங்க சேவையில் நியமிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையின் பேரிலேயே இவ்விதம் கடமையாற்ற சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

### புதிய பாடசாலை.

கந்தரோடையில் புதிய தொரு பௌத்த பாடசாலை அமைப்பதற்கான வேலைகளில் பௌத்த திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

டாக்டர் பந்துல பெரேரா கொலை வழக்கு:

## காரிலிருந்து சிலர் ஓடியதைக் கண்டதாக ஒருவர் கூறினார்

### ராணுவ கப்டன் சாட்சியம்

கோட்டை, செவ்.
டாக்டர் பந்துலபெரேரா கொலைவழக்கு விசாரணை மீண்டும் நேற்று முன்தினம் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. சி. எவ். டி. சில்வா முன்னிலையில் நடைபெற்றபோது வீதிவழியே வந்துகொண்டிருந்த கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த வோல்டர் பீலிக்ஸ் சில்வா கார் லைட் இன்றித் தெருவின் நடுப்பகுதியில் வருவதைக்கண்டதாகவும், விகாரமகாதேவிப் பூங்காப் பக்கமாக வந்துகொண்டிருந்த கார் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டதாகவும் பீலிக்ஸ் சில்வா சாட்சியத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: வந்து கொண்டிருந்தபோது விகாரமகாதேவி பூங்காப் பக்கமாக ஒருவர் ஓடுவதைக் கண்டேன். இன்னுமொருவர் அந்தச் சந்தியிலிருந்து தடியுடன் ஓடுவதைக் கண்டேன்.

முதலாவது எதிரியின் வழக்கறிஞர் யூ. எல். எம். பாரூக் சாட்சியைக் குறுக்கு விசாரணைசெய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வப்பகுதி கிளிநொச்சிமன்னூர், மூதூர் திருகோணமலை தொகுதி முடிவுகளில் பிரச்னை இருப்பதாகவும்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வடபகுதி பௌத்த பாடசாலைகள் சம்பந்தமாக வருகிறவார நடுப்பகுதியில் பிரதமரை சந்தித்துப் பேசவும் தமிழரசுக்கட்சி முடிவுசெய்துள்ளது.

றுள்ளது.

தாய்க்கும் தந்தைக்குமிடையே பணப் பிரச்னை காரணமாக வாக்குவாதம் நடந்ததாகவும் அதைத் தொடர்ந்து தந்தை தாயாரை அடித்ததாகவும் கூறப்படுகிறது. தந்தை தமது தாயாரை அடித்ததைக் கண்ட மகன் தமது தந்தையை வெட்டியதாக தெரிகிறது, இது சம்பந்தமாக மகன், கைது செய்யப்பட்டுள்ளார்.

சாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள போதிலும் பெற்ரோர் விரும்பினுல் சிங்கள மொழி மூலம் பாடபோதனையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து பதற்காக நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்கு இடைக்கால உத்தரவை கல்வி அமைச்சருக்குப் பிறப்பிக்கும் நோக்கத்துடன் இவர்கள் நீதிமன்றத்தின் உதவியை நாடமுன் வந்துள்ளதாக அறியப்படுகிறது.

இன்றைய அரசியலும் தமிழ்மக்களின் நிலையும் என்னும் விடயம் பற்றி இன்று மாலை சினக் ம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் திரு.என். சண்முகதாசன் யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் பேசுவார்.

மன்றும் நேற்று முன்தினம் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. சி. எவ். டி. சில்வா முன்னிலையில் நடைபெற்றபோது வீதிவழியே வந்துகொண்டிருந்த கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த வோல்டர் பீலிக்ஸ் சில்வா (வயது 54) சாட்சியமளித்தார்.

சம்பவதினம் இரவு படம் பார்த்துவிட்டுக் காரில் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது விக்டோரியாப் பூங்காச் சந்தியில் ஒரு மகாதேவிப் பூங்காப் பக்கமாக வந்துகொண்டிருந்த கார் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டதாகவும் பீலிக்ஸ் சில்வா சாட்சியத்தில் தெரிவித்தார்

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாது: அக்காரில் சென்றுகொண்டிருந்தவர்களை என்னுல் பார்க்கமுடியவில்லை. காரிலிருந்து எதுவித சத்தமும் கேட்கவில்லை. நான் எவ். ஆர். சேனநாயக்கா மாவத்தை, ட்ரட்ரூட் சந்திக்கு கண்டேன். இன்னுமொருவர் அந்தச் சந்தியிலிருந்து தடியுடன் ஓடுவதைக் கண்டேன்.

முதலாவது எதிரியின் வழக்கறிஞர் யூ. எல். எம். பாரூக் சாட்சியைக் குறுக்கு விசாரணைசெய்தார்.

இரண்டாவது எதிரியின் சிரேஷ்ட வழக்கறிஞரான திரு. இ. விவேகானந்தன் குறுக்குவிசாரணை செய்த போதுசம்பவம்நடைபெற்ற தினம் இருட்டாக இருந்ததால, அவ்வழியால் ஓடிக்கொண்டிருந்தவர் என்ன உடையணிந்திருந்தார் என்பதைக் கவனிக்க முடியவில்லை என்ருர்.

4-வது எதிரியின் வழக்கறிஞர் திரு. எஸ். டி.எஸ்.குணசேகரா குறுக்கு விசாரணை செய்தபோது, நடுத்தர வயதுடைய முதலாவது நபரை சேனநாயக்கா மாவத்தையில் இரு சந்திகளுக்கும் நடுவில் கண்டதாகவும். இரண்டாவது நபரை சேனநாயக்கா மாவத்தையிலிருந்து அப்பொழுதுதான் டரட்ரேட்டுக்கு வந்துகொண்டிருந்ததாகவும் கூறினுர்.

இலங்கை ராணுவத்தில் காப்டனுக கடமைபுரியும் ஜோன் இத்தோடன் இஸ்ரமும் சாட்சியமளித்தார்.

அவர் கூறியதாவது:- சம்பவதினமிரவு, சம்பவம் நடைபெற்ற வீதியால் ஜீப்பில் சென்றுகொண்டிருந்த போது, சந்தியில் 5பேர் நிற்பதைக் கண்டேன். நீங்கள் யார் என்றுகேட்டபோது அந்தப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கூறினர்.அரசமரத்தடியில் நிற்பாட்டப்பட்டிருந்தகார் அங்குமிங்குமாக ஓடிவந்துநின்றதாக அங்குநின்ற ஒருவர் என்னிடம் கூறினுர். அக்காரிலிருந்து சிலர்இறங்கி ஓடியதைக் கண்டதாகவும்கூறினுர். பின்னர் நான் இதை பொலிசுக்கு அறிவித்தேன். நான் காரைக் கண்டபோது நேரம் சுமார் 11-45 அலலது11-50 இருக்கும்.

கடந்த ஏப்ரல மாதம்24ந் திகதி இரவு விக்ரோறியா பூங்காவிற்கு அருகில டாக்டர் பந்துலு பெரேராவைக் கொலைசெய்ததாகவும் செலவி ஹிராந்தி டி சிலவா என்ற இளம்பெண்ணை உடலுறவுவைக்கும் நோக்குடன் கடத்த முயற்சித்ததாகவும் முத்தையா, சுப்பிரமணியம், ஆண்டி, அந்தோனிப்பிள்ளை ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டு இவ்வழக்கு தாக்கல செய்யப்பட்டது.

மேல விசாரணை இம்மாதம் 12ந் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

# 24 மணி நேரத்துள் காணியை விடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

**நேற்று முன்தினம் அரசினரால் பொறுப்பேற்கப்பட்ட கரவெட்டி பௌத்த பாடசாலை அமைந்துள்ள காணிச் சொந்தக்காரர் இருவர் பாடசாலையை அவ்விடத்திலிருந்து 24 மணி நேரத்துள் அகற்றுமாறு வடமாநிலக் கல்வி அதிகாரி திரு. தணிகாசலத்துக்கு புறக்டர் மூலம் அறிவித்தல் (புறெக்டர் நோட்டீஸ்) செய்துள்ளனர் குறிப்பிட்ட காணி தங்களுக்கு வேண்டுமென பருத்தித்துறை நீதிமன்றத்தில் 1966ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்ததாகவும் இந்த வழக்கு தீர்ப்பு வருமுன்னர் அரசாங்கம் இவ்வித முடிவுக்கு வந்தது நியாயமற்றது என்றும் இவர்கள் கல்வி அமைச்சருக்கும் பிரதமருக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளனர்.**

காணிச் சொந்தக்காரர்களில் ஒருவரான திரு.சிவலை சித்தன் என்பவர் செய்துள்ள புகாரில் கரவெட்டி மேற்குகணுவில் என்றஇடத்திலுள்ள பெரிய தோட்டம் என்ற காணியில் கணுவில் சனசமூக நிலையத்தினர் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கென ஒருவருட காலத்துக்கு மட்டும் 9-1-65 ல் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்ததாகவும் அப்போது சனசமூக நிலைய காரியதரிசிகளாகயிருந்த திரு. ராஜரெத்தினமும், திரு மு.தவராஜாவும் இதற்கான ஒப்பந்தத்தை எழுத்துமூலம் செய்து கொண்டனர் என்றும் தெரிவித்துள்ளார். தமது ஒப்பந்தத்தை மீறி பாடசாலைக் காணியை அரசாங்கம் சுவீகரித்ததற்கு அவர் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளார்

இதே காணியில் மற்றைய பங்குதாரரான நல்லான் தெய்வி என்பவர் தமது விருப்பத்துக்குமாருக தமது காணியில் சனசமூக நிலையத்தினர் பாடசாலையை அமைத்ததாக கல்வி அமைச்சருக்கு அறிவித்துள்ளார். 1967-ம் ஆண்டில் புறக்டர் சபாபதிப்பிள்ளை மூலம் தாம் அரசாங்கத்துக்கு விடுத்தஅறிவித்தலில், காணியை தரும்படி கேட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் 1966-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட (வழக்கு இல.(9023 வழக்கின் பிரதியை பிரதம மந்திரியிடம் தாங்கள் காட்டியதாகவும் தங்களது சம்மதமின்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாதெனப் பிரதமர் வாக்குறுதி அளித்ததாகவும் காணிச் சொந்தக்காரர் கல்வி அமைச்சுக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட காணியிலுள்ள பாடசாலையை பௌத்த பாடசாலையாக மாற்றுவதற்கு தாங்கள் விரும்பவில்லையென்றும் இவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கப் பட்ட போது, கல்வி இலாகா அதிகாரிகள் எவரும் அங்கு சமூகமளிக்காததால் தாங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க முடியவில்லை என்றும் அறிவித்துள்ளனர்.

# 'கல்வியில் முஸ்லிம்கள் முன்னேறவேண்டும்'

## மீலாத் விழாவில் மாநகரசபை உறுப்பினர் ஜனுப் பஷிர்

யாழ்ப்பாணம், செவ்.

'எங்கிருந்தாலும் எங்கு சென்ருலும் அறிவைத் தேடிக கொள்ளுங்கள் என்பதுவே பெருமானுர் ஸல் அவர்களின் நல்லுபதேசம். இதனை நாம் எவ்வித பேதமும் பாராட்டாது உண்மையான வழியில் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு லெப்பை ஒழுங்கையில் இஸ்லாமிய சிறுவர்களால் நடாத்தப்பட்ட மீலாத் விழாவில உரையாற்றிய யாழ். மாநகரசபை அங்கத்தவர் ஜனுப் எம் ஜி. பசீர் எடுத்துக் கூறினுர.

அவர் மேலும் பேசுகையில் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்தால் தான் நமது சமுதாயம் முன்னேற முடியுமென்றும் இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் பெற்ரோரின் சொற்கேட்டு கல்வித் துறையில் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மார்க்கக் கல்விமூலம்தான் இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்கலாம் என்றும் இதனை மாணவர்கள் பெறுவதற்கு ஆசிரியர் உதவ வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சம்மாந்துறை காரியாதிகாரி ஜனுப் எம். எம். மக்பூல் பேசுகையில, சகிப்புத் தன்மையை முஸ்லிம் மக்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

ஜனுப் ஷேக் அப்துல் காதர் பேசுகையில முஸ்லிம் மக்களிடையே ஐக்கியம் பற்றி வலியுறுத்திஞர். யாழ் மாநகரசபை உறுப்பினர் ஜனுப் ஏம். ஏ. சி. எஸ். ஏ. காதரும் மற்றும் பலரும் பேசினர்.

அலஹாஜ் முஹிதீன் ஆலிம் தலைமையில விழா நடைபெற்றது

## ஆஸ்பத்திரி சுப்பிரிண்டன் உத்தரவு:

# நோயாளிக்குபிரதமதாதியே ஊசி ஏற்ற வேண்டும்

## போயாவிலும் வெளிநோயாளர் சிகிச்சை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் மாணவத் தாதிமார் எவரும் இனிமேல் கடமையாற்ற முடியாது. ஆஸ்பத்திரி சுப்பிரிண்டன் இந்த உத்தரவை நேற்று விதித்தார்.

தவறுதலான ஊசியை எட்டு வயதுச் சிறுமி ஒருவருக்கு மாணவ ஆண் தாதி ஒருவர் நேற்று முன்தினம் ஏற்ற முயன்றதாக கிடைத்த புகாரின் பேரில் நடைபெற்ற விசாரணை முடிவிலேயே இந்த உத்தரவு நேற்று விதிக்கப்பட்டது.

வார்ட்டிலும் சரி, சிகிச்சை நிலயங்களிலும் சரி அங்கு பொறுப்பாக இருக்கும் பிரதம தாதிகளே நோயாளிகளுக்கு ஊசி ஏற்ற வேண்டுமென்றும், மாணவத்தாதிகள் எக்காரணம் கொண்டும் 'நோயாளிகளுக்கு ஊசி ஏற்றக்கூடாதென்றும் இப்புதிய உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாரத்திலிருந்து இனிமேல் போயா தினங்களிலும் வெளிநோயாளர் சிகிச்சை நிலயத்தில் டாக்டர்கள் சிகிச்சை அளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தினசரி நாட்கள் போல போயா தினத்திலும் 4 டாக்டர்கள் வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் காலை 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(கா. நி.)

# 'ஆபாசப் பாட்டுகளை ஒலிபரப்ப வேண்டாம்'

## ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திடம் அண்ணமலை இசைத்தமிழ் மன்றம்

நல்லூர், செவ்வாய்

தமிழர் பண்பாடுகளுக்கு ஒவ்வாத ஆபாசம் நிறைந்த சினிமாப் பாடல்களை ஒலிபரப்பாமல் நிராகரிக்கவேண்டும் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிர்வாகிகள், மெல்லிசைக் குழுவினர், ஒலிபெருக்கியமைப்பாளர் ஆகியோரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மான மொன்றை யாழ்-அண்ணமலை இசைத்தமிழ் மன்றத்தார் அண்மையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளனர்.

பணப்பெட்டிகளை நிரப்பி வைக்க வேண்டுமென்றஒரே நோக்கத்துடன்குறுகியமனப் பான்மையோடு தயாரிக்கப் வெளியாகி வரும் இன்றைய தமிழர் சினிமாவில் தமிழருக்கே உரியதான கலாச்சாரம், பண்பாடு என்பவை கொஞ்சமேனும் இடம்பெருமல் இருப்பதுடன், தெய்வீகத் தன்மை வாய்ந்த இசை வரம்புகள் கூட மீறப்பட்டு, ஆபாசம் நிறைந்து அருவருப்புக் கொள்ளக்கூடியபாடல்களும் இடம் பெறுகின்றன என்றும் அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களிலும், மற்றும் வழிபாட்டுத் தலங்களிலும் சூழ் நிலையைப் புனிதப்படுத்தக் கூடிய வகையில் பக்திப் பாடல்கள், நாதஸ்வரம் போன்ற வாத்திய இசைகள் இடம் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்ளும்தீர் மானமும் நிறைவேற்றப் பட்டது

## ஈழநாடு 10- வது ஆண்டு நிறைவு விழா

# மின்னெளிப் பந்தலில் கூடைப்பந்தாட்டம்; வாலிப விருந்துகள் உதைபந்தாட்டமும் மரதனும்;

## ஒன்று சேர்ந்திடுவீர்! திரண்டு வந்திடுவீர்!! பார்த்து மகிழ்ந்திடுவீர்!!!

யாழ்ப்பாணம், புதன்

மின்னெளிப் பந்தலில் நடைபெறும் கண் எழில் கூடைப் பந்தாட்டப் போட்டியில் நீங்களும் கலந்து கொள்ள ஆசைப்படுகிறீர்களா? யாழ். மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களுக்கு மிடையே நடைபெறும் கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பம் அனுப்பிவிட்டீர்களா? 21 வயதுக்கு மேற்பட்ட வீரர்களுக்காக நடைபெறும் 26 மைல் மரதன் ஓட்டத்தில் கலந்து கொள்கின்றீர்களா; இவற்றிற்கு விண்ணப்பம் அனுப்பிவிட்டீர்களா? இல்லாவிட்டால் இன்றேஉங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள். மூன்று போட்டிகளுக்குமான விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளும் கடைசிநாள் நாளையே தான்.

உங்கள் விண்ணப்பங்களை நேரிலோ, கடிதமூலமோ வண்ணை சிவன்கோவில் மேலை வீதியிலுள்ள ஈழநாடு அலுவலகத்துக்கு நாளை 5-ம் திகதி மாலை 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

கூடைப்பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலுள்ள மைதானத்தில் மின்வெளிச்சத்தின் கீழ் நடைபெறும்.

கரபந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெறும் கழகத்துக்கு 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணம் பரிசாக வழங்கப்படும். இதன் இறுதிப் போட்டி 12-ம் திகதி ஆரம்பமாகும். 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா வையொட்டி நடைபெறும்.

26 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெறும் வீரருக்கு 'நொர்தன் இன்டஸ் றீஸ்' ஸ்தாபனத்தார் வழங்கும் மிகப்பெறுமதிவாய்ந்த வெற்றிக் கிண்ணம் ஒன்று நிரந்தரமாக வழங்கப்படும்.

14-ம் திகதி நடைபெறும் 'ஈழநாடு விழாவின் காலை நிகழ்ச்சியின் முதலாவதாக இது இடம்பெறும். மரதன் ஓட்டம் நடைபெறும் பாதையை அறிய தொடர்ந்து 'ஈழநாடு' வாசியுங்கள்.

சகல போட்டிகளிலும் அவற்றி லீடுபடுபவர்களுக்கு 14 ம் திகதி இரவு யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறும் 'ஈழநாடு' கலைவிழாவில் பரிசில்கள் வழங்கப் படும்.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பயிற்சியாளர்கள் தேவை இம்மாதம் 15-ந் திகதிக்கு முன்னர் நேரடித் தொடர்பு கொள்ளவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். தொலைபேசி: 410 1168

றைகிளீன் செய்த உடைகளை பில்லுடன் சரிபார்த்துக் கொடுப்பதற்கு ஆள் தேவை. அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. அனுபவமில்லாதவர்களுக்கு3 மாதகாலத்திற்கு வேதனம் ரூபா50/- சன்லைட் டையேர்ஸ் அன் றைகிளினேர்ஸ், ராணித் தியேட்டருக்கருகாமை, யாழ்ப்பாணம். 1176

### கல்வி

ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சை விண்ணப்பப் பத்திரங்கள்சதம் ஐந்துடன் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி பரீட்சைக்குரிய வகுப்புகள் ஆனி 11-ந் திகதி ஆரம்பிக்கப்படுகிறது. சிங்களம் காலை மாலை வகுப்புக்கள் (உத்தியோகஸ்தர்களுக்கு விசேட மாலை வகுப்புகள்) G. C. E. A / Lபௌதிக வகுப்பு ஆனி 11-ந் திகதி ஆரம்பமாகிறது. College of Education Opposite the old Bus Stand, Jaffna. 1177

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 4—6—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறு

## கேள்வி விளம்பரம்

நெடுந்தீவு கிராமசபை அக்கிராசனரால் 1969 ம் ஆண்டு யூன்மாதம் 20-ந் திகதி முற்பகல் 9-30 மணி வரையும் நெடுந்தீவு மேற்கு நெழுவினிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் 'திறந்த வெளியரங்கு' ஒன்றை அமைப்பதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அவர்களின்கீழ் தம்மை ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் நெடுந்தீவு கிராமசபைக் கந்தோரில் 18-6-69-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் ரூபா 50/- கேள்விப் பிணையாகக் கட்டியும் கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 15/- கட்டியும் பெற்றுக் கொள்ளலாம்.

3. இதன் நகல் பிரதி ஒன்று அதேநேரத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள், யாழ்ப்பாணம். கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. இதுசம்பந்தமான மேலும் விபரங்களை நெடுந்தீவு கிராமசபை கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
த. அம்பலம்,
அக்கிராசனர்,
கிராமசபை நெடுந்தீவு.
கிராமசபை அலுவலகம்,
நெடுந்தீவு. 2.6-69. 1591

## முதலிடம் பெற்றவர்கள்

திருகோணமலை, செவ்.

தம்பலகமம் கோயில் குடியிருப்பு வாலிபர்களால் நடாத்தப்பட்ட சயிக்கிளோட்டப் போட்டிகளில்20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் செல்வன் என். செல்வராஜா என்பவரும், 15 வயதுக்குட்பட்டவருக்கான போட்டியில் செல்வன் எஸ். கோபாலபிள்ளை என்பவரும் முதலிடம் பெற்றனர்.

## 'மேலும் மூன்று கிராமசேவையாளர் வேண்டும்'

சாய்ந்தமருது, செவ்.

சாய்ந்தமருதுக்கு மேலதிகமாக இன்னும் மூன்று கிராமசேவகர்களை நியமிக்க


## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ்ப்பாணம் மத்திய சந்தைக் கட்டிட தலத்தில் வேலையாட்களுக்கு இன்னும் சில இடங்கள் காலியுண்டு. படிப்பு முடிந்து வேலையின்றித் திண்டாடும் யாழ்ப்பாணத்து இளைஞருக்கும் (அதன்பின்) மற்றைய யாழ்ப்பாணத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் இந்த வேலைகள் கொடுக்கப்படும். பிறந்த நாட்டின் விருத்தியைச் சொந்தக் கைகளால் தாமே சிருஷ்டிப்பதற்கு வேண்டிய மனப்பக்குவமும் வைராக்கியமும், உடம்பை வருத்தி வியர்வை சிந்திச் செய்யும் தொழிலுக்கு மனத்தில் உயர்ந்த மதிப்பும் உள்ள வேலையாட்களே எங்களுக்குத் தேவை.

**நாட் சம்பள விவரங்கள்:**
விசேட அனுபவம் உடையவர்கள் ரூ. 8-00
சாதாரண பலவித வேலையாட்கள் ரூ. 5-00
18 வயதுக்கு உட்பட்டவர்கள் ரூ. 4-00

MITE
ORGANIZATION

'மைட்' ஸ்தாபனக் கந்தோர்
யா. மா. ச.
மத்திய சந்தைத் தலம்,
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விண்ணப்பகாரர்கள் பகல் 12-30 மணிக்கு அல்லது பின்னேரம் 6-00 மணிக்கு நேரில் வருவது விரும்பத்தக்கது. 1592


## குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகப் பத்திரிகைக் கலை மன்றத்தினர் நேற்று முன்தினம் திருஞானசம்பந்தர் குருபூசையை விமரிசையாகக் கொண்டாடினர். மன்றத் தலைவர் செல்வன் செ. சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் செல்வன் எஸ். துரைராஜசிங்கத்தின் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெற்றது. (கா,நி)

★

சுழிபுரம், செவ்வாய்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப்பட்டது. பண்

# கிராமப்புறங்களில் சிறந்த வீரர்கள் இருக்கிறார்கள்

## வலி. வடக்கு விளையாட்டு போட்டியில் அமைச்சு அதிகாரி

யாழ்ப்பாணம், புதன்

வலிகாமம் வடக்கு உடுவிற்பகுதி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது கந்தரோடை சனசமூக நிலையம் 43 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், கோஷஸ்விளையாட்டுக் கழகம் 40 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், உடுவில் புஸ்ளற்ஸ் 23புள்ளிகளைப்பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய சேவை அமைச்சின் விளையாட்டுப் பகுதி நிர்வாகஸ்தர் டாக்டர் எச். எஸ். ஆர் குணவர்த்தன வட பகுதியில் விளையாட்டுப் போட்டிகளின் தரம் உயர்ந்திருப்பதையும், போட்டிகளை நடாத்திய ஒழுங்கு முறைகளையும் பாராட்டினார். மேலும் அவர் பேசுகையில் அச்சுவேலி சென். திரேசா கொன்வென்டும், இராமநாதன்கல்லூரியும், மல்லாகம் இந்துக் கல்லூரியும், ஸ்கந்தவரோதயக்கல்லூரியும் பங்குபற்றிய உடற்பயிற்சிக் கண்காட்சி மிகவும் சிறந்தமுறையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டார். இலங்கையில் மிகச்சிறந்த வீரர்களை இன்னும் இரண்டு வருடத்திற்குள் கிராமப்புறங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாமென தோன்றுவதாகவும், யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்தரம் மிகவும் உயர்ந்திருப்பது தனக்குப்பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது என்றும் கூறினார். போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு திருமதி ஏச். எஸ். ஆர். குணவர்த்தன பரிசில்களை வழங்கினார்.

# "தமிழ் இனத்தின் இரட்சகர் வள்ளுவப் பெருந்தகையே"

— துணைமுதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், புதன்

'யூத இனத்திற்கு மோசே எப்படி ஆண்டவரால் ஒரு விழியாகக் கொடுக்கப்பட்டாரோ அதே போன்று தமிழ் மக்களுக்கு ஆண்டவரால் அருளப்பட்ட நல்வழிகாட்டி தமிழினத்தின் இரட்சகர் திருவள்ளுவப் பெருந்தகையே. வள்ளுவப் பெருந்தகையின் 2000-ம் ஆண்டு நினைவுவிழாவை இத்தனை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக யாழ். மாநகரசபை பொழுதுபோக்குச் சங்கத்தை நான் பாராட்டுகின்றேன்.'

யாழ். மாநகரசபைத் துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை பொழுதுபோக்குச்சங்க ஊழியர்கள் சார்பில் யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் நேற்றுமுன்தினம் திருவள்ளுவர் விழா திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது. திரு. துரைராஜசிங்கம் தமது தலைமையுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் மட்டும்தான் அரசாங்க ஊழியர்களும், வங்கி ஊழியர்களும் இது போன்ற தமிழ் விழாக்களை நடத்தியுள்ளார்கள். கொழும்பில் பாரதிவிழாவும், சரஸ்வதிபூசையும் கொண்டாடப்பட இங்கு எமதுமாநகரசபை ஊழியர்களோ தமிழ்மறை தந்த வள்ளுவருக்கு விழா எடுக்கிறார்கள்.

யூதர்களுக்கு மோசே போல தமிழினத்துக்கு வள்ளுவரே. மோசே யூத மக்களுக்கு பத்துக்கற்பனைகளைத் தந்தார். வள்ளுவரோ வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய அத்தனையையும் சொல்லிவிட்டார். வள்ளுவர் சொல்லாதுவிட்டது எதுவும் கிடையாது.

வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்கவேண்டு

## இன்றைய பலன்

4-6-69

வைகாசி மாதம்

22-ம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைச் செய்திகள்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

### பசளைக் குதம்

திருக்கோணமலை, செவ்

அல்லை விசேட அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுவரும் பசளைக் கட்டடத்தின் வேலைகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

கட்டடத்தின் வேலைகள் பூர்த்தியடைந்ததும் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் சிரமம் எதுவுமின்றி தமதுபயிர்களுக்கேற்றபசளைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

0 0 0

### 3 மாதத்தின்பின் மரணமானார்

கந்தளாயில் வட்டக்கச்சி என்னும் இடத்தைச்சேர்ந்த ஒருவர் மூன்றுமாதங்களுக்கு முன்பு காட்டிற்கு வேட்டைக்குச் சென்றிருந்தார். அச்சமயம் காட்டில் வைத்து காட்டுப்பூனை ஒன்றினால் தாக்கப்பட்டுப் பலத்தகாயமடைந்தார். சில நாட்களில் சிகிச்சை மூலம் இக்காயங்கள் குணப்படுத்தப்பட்டனவாம்

ஆனால் இந்நபருக்குக் காயங்கள் இருந்த இடத்தில் பலத்த வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து திடீரென இவர் மரணமடைந்தார். இத்தகவல்கள் மரண விசாரணையில் தெரியவந்தன. மரண விசாரணை அதிகாரி திரு. பி. டி. ஈ. விக்டோரியா ஏற்புவலியால் ஏற்பட்ட மரணம் எனக் கூறித் தீர்ப்பு வழங்கினார்.

0 0 0

### பெண் கொலை

முப்பத்தெட்டு வயதுடைய ஒரு பெண்ணைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் சந்தேகநபரான கந்தளாய் சீனி ஆலையில் உழவு இயந்திர சாரதியாகக் கடமைபுரியும் முப்பத்திரண்டு வயதுடைய ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கொலை செய்வதற்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கிறிஸ் கத்தியொன்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இறந்தவரின் உடலில் 12 காயங்கள் காணப்பட்டன என்று பிரேதபரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபரை ஜூன் மாதம் 12-ம் திகதிவரை விளக்கமறிய

### 6-ம்திகதி விசாரிக்கப்படும்.

அனுராதபுரம்- திருக்கோணமலை வீதியில் திருமலை நகரத்திலிருந்து சுமார் 14 மைல்களுக்கப்பாலுள்ள பன்குளம் எனனுமிடத்தில் அண்மையில் நடைபெற்ற துணிகர கொள்ளை, களவு, கொலை முயற்சி ஒன்றின் காரணமாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருமலை மாவட்ட நீதிமன்றத்தில் மீண்டும் இம்மாதம் 6-ம் திகதி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

கம்பஹா மாவட்டத்திலுள்ள வலிவெரியாவைச் சேர்ந்த லூகாஸ், பொல்காவலையைச் சேர்ந்த வில்லியம் பெர்ணாண்டோ என்னும் இருவர் ஈனஸ் என்னும் டாக்ஸி சாரதியைக் கொலைசெய்ய முயற்சித்ததற்தாககவும் பணத்தை கொள்ளையடித்ததற்காகவும் 18,000 ரூபா பெறுமதியான காரைக் களவாட முயன்றதாகவும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

### உதைபந்து வீரருக்குப் பயிற்சி

பிரேசில் தேசத்தில் உதைபந்தாட்டத்தில் பயிற்சி பெற்ற திரு. அல்பேர்ட் பெர்ணண்டோ இங்கு இரண்டுநாட்கள் தங்கியிருந்தார்.

இவரது விஜயத்தை விளையாட்டு அமைச்சும் திருக்கோணமலை மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. முத்தையா கிருபாகரனும் விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எஸ். இரத்தினசபாபதியும் ஒழுங்கு செய்திருந்தனர். திரு.அல்பேர்ட் பெர்ணண்டோ திருக்கோணமலைக்குப் புதிய ஒருவரல்லர். ஏற்கனவே பல தடவைகள் இங்கு விஜயம் செய்து ஆயிரத்துக்கும் மேற்பட்டஉதைபந்தாட்ட வீரர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்த இவர் இம்முறையும்இரண்டு தினங்களாக வீரர்களுக்கு விசேஷ பயிற்சி அளித்தார்.

உதைபந்தாட்டத்தின் அடிப்படை விதி வகைகளை வீரர்கட்கு விளக்கியதுடன் பந்தைக்கட்டுப்படுத்துவதற்கான பல வழிகளை செய்து காட்டியும், சாதுர்யங்களையும், பெனல்டி உதைகளை ஏற்றுக்கொள்ளும் திறமைகளையும் இவர் நன்கு எடுத்துக்காட்டினார்.

## லொறி மோதி ஸ்தலத்தில் பலி

யாழ்ப்பாணம், புதன்

லொறி விபத்தொன்றில் சிக்கியவர், உடம்பு சிதைந்த நிலையில் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை பரந்தனில் நடைபெற்றது. இங்குள்ள வீரசாமி என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

கிளிநொச்சி மாஜிஸ்டிரேட் நேற்று ஸ்தல விசாரணை நடத்தினார். கிளிநொச்சி பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

சம்பந்தப்பட்ட லொறியின் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். மரணவிசாரணை நடைபெறுகின்றது. (கா. நி.)

## நடை பஜனை

யாழ்ப்பாணம், புதன்

விசாகத்தை முன்னிட்டு நல்லூர் பஜனைச்சபையினர் கடந்த வெள்ளியன்றிரவு நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து திரு. சி. கந்தசாமி தலைமையில் செல்வச்சந்நிதிக்குப் பாதையாத்திரை செய்தனர். சமயப்பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டி யாத்திரைக் கோஷ்டியினரை வழியனுப்பிவைத்தார். சபைத்தலைவர் திரு. வே. சுப்பிரமணியம் உரையாற்றினார்.

நூற்றுக்குமதிகமானோர் கலந்துகொண்ட இந்நடைபஜனை சந்நிதியையடைந்தபோது, சந்நிதி ஆனந்த ஆசிரம நிர்வாகி ஸ்ரீமத் மயில்வாகன சுவாமிகள், அவர்களை வரவேற்று உபசரித்தார். பஜனைச்சபைச் செயலாளர் திரு. த. இராசரத்தினம் நன்றி தெரிவித்துப்பேசினார். இங்கிருந்து வழிநெடுகிலும் பல இடங்களிலும் பஜனைக் கோஷ்டியினருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

ஈழநாடு
புளுகுப் போட்டி - (6)

டவை, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர்நிகழ்ச்சி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00செய்திச்சுருக்கம், 7 03 வயலின் இசை, 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை. 9-30 இசைநிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

## 'மேலும் மூன்று கிராமசேவையாளர் வேண்டும்'

சாய்ந்தமருது, செவ்.

சாய்ந்தமருதுக்கு மேலதிகமாக இன்னும் மூன்று கிராமசேவகர்களை நியமிக்க வேண்டுமென்று உள்நாட்டமைச்சரைக் கோரும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற கரைவாகு தெற்கு (சாய்ந்தமருது) கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சாய்ந்தமருது ஆறு குறிச்சிக்கும் தற்பொழுது மூன்று கிராமசேவையாளர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர் வரலக்ஷ்மி நடித்த

உயிரா மானமா

5-வது வெற்றி வாரமாக காட்சியளிக்கின்றது

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ் அசோகன் - கீதாஞ்சலி நடித்த

அதே கண்கள்

நாளைமுதல்

கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜயா (மட்டுநகர்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகின்றது

(ஜேம்ஸ்பொன்ட்) ஜெய்சங்கர் - (ஆடலழகி) ஜெயலலிதா

நாகேஷ் - மனோரமா - சோ

குமாரி சச்சு, சுந்தரராஜன் நடித்து

வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில் உருவாகி வெளிவந்துள்ள மகோன்னத சித்திரம்

பாம்மலாட்டம்

திரைக்கதை வசனம் சோ. இசையமைப்பு வி. குமார்


...சைக் கச்சேரியும் நடைபெற்றது. (கா, நி)

★

சுழிபுரம், செவ்வாய்

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப்பட்டது. பண்டிதர் அ. ஆறுமுகம், பண்டிதர் ப. இராசகுரு மற்றும் பலர் பேசினர். செல்வன் எஸ். சிவபாலனின் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெற்றது.


ராஜா (யாழ்ப்பாணம்) 142வது தினம்

தினசரி 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த

ஒளிவிளக்கு (ஈஸ்ட்மென் கலர்)

மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை

ரஞ்சனா தியேட்டர்

ஜெய்சங்கர் - விஜயா நடித்த

பெண்ணே நீ வாழ்க

இணுவில்

ஸ்ரீ காலிங்கன்

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30 மணி

சிவாஜி — ஜமுனா நடித்த

நிச்சயதாம்பூலம்

வெஸ்லி சினிமா (மானிப்பாய்)

தினசரி6-30, இரவு10-00

பிரிபோயா, போயா 10-30மணி

எம். ஜி. ஆர். - சாவித்திரி நடித்த

பரிசு

(இன்று மட்டும்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சிவாஜி - பத்மினி நடித்த

பேசும் தெய்வம்

REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m

Women of The World (color)

MANOHARA JAFFNA

Daily 4-45, 7 & 9-45P.M.

Rod Steiger, Lee Remmick in NO WAY TO TREAT A LADY (Techni Color)

[Academy Award Winner]


## பலன்

4-6-69

வைகாசி மாதம்

22-ம் திகதி

புதன்கிழமை

திதி- சதுர்த்தி பகல் 9-41 மேல் பஞ்சமி.

நட்சத்திரம்- உத்தராடம் பகல் 1-09 மேல் திருவோணம்.

ராகுகாலம்- 11-52 — 1-22.

சுபநேரம்- 4-22 — 5-52.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு வேளாண்மைத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு நன்மையான பலன்களைக் குறிப்பிடுகின்றது. காதலர்கள் வாழ்க்கையில் இன்பமயமான காலம். சிலர்வாழ்க்கையில் திடீர் திருமணங்களும் இடம் பெறும். இயந்திர வளர்ச்சியில் அதிக ஆர்வம் ஏற்படும். தொழில்துறையில் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

மேஷம்- நல்ல முடிவு, நன்மைகள் சேரும்.

ரிஷபம்- புத்திர சுகம், புதிய பாதை.

மிதுனம்- எதிரிபகை, ஏக்கமிகுதி.

கடகம்: களஸ்திரசுகம், கண்ணியம் சேரும்.

சிம்மம்- நம்பிக் கெடுதல், நஷ்டமடைதல்.

கன்னி- பிதாவழிச் சுகம், பெரியோர்மதிப்பு.

துலாம்- தொழில்நலன் தொடர்புகள் பெருகும்.

விருச்சிகம்- பொருள் வரவு, புதினம் கேட்டல்

தனுசு- தானிய நஷ்டம், தனிவழி நாட்டம்.

மகரம்- குடும்பக்கவலை, குறுக்குவழித் தலையீடு.

கும்பம்- வாக்கு மேம்பாடு வசதிகள் பெருகும்.

மீனம்- ஆசாரக்குறைவு அவசரக்கோலம்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

...களைத் தந்தார். வள்ளுவரோ வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய அத்தனையையும் சொல்லிவிட்டார். வள்ளுவர் சொல்லாதுவிட்டது எதுவும் கிடையாது.

வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்கவேண்டுமென்பதற்கு வள்ளுவர் ஓர் இலக்கணத்தையே தந்துவிட்டார். வள்ளுவர் காட்டிய பாதையில் நாம் வளர்ந்தோமானால் தமிழினம் முன்னேறும். இல்லாவிட்டால் தமிழினம் செத்தொழியும்.

கவிஞர் இ. நாகராஜன் தலைமையில் 'வள்ளுவர் கற்றும் வளர்ந்தோமா' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வே. குமாரசாமி, காரை. செ சுந்தரம்பிள்ளை, மாணிக்கக் கவிராயர், நவாலியூர் கவிராயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலியார் எஸ். முத்துத்தம்பி, காரை. செ. சுந்தரம்பிள்ளை ஆகியோரது சொற்பொழிவும், செல்வி மலர்தேவி இராஜசிங்கத்தின் இன்னிசையும், சுண்டிக்குளி கலாமன்றத்தாரின் நாடகமும் இடம்பெற்றன. யாழ். மாநகரசபை ஊழியர் சங்கச் சார்பில் திரு. சா. தருமரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினார். (கா. நி.)

## கஞ்சாவிற்ற ஐ. ஆர். சி.

காலி, செவ்வாய்

1380 கிறாம் கஞ்சாவை வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கொன்றில் எதிரிக்கு ரூபா 1000 அபராதம் விதிக்கப்பட்டது. காலி மேலதிக நீதிமன்றத்தில் நடைபெற்ற இவ்வழக்கை மாஜிஸ்திரேட் திரு. ரஞ்சித் டீறறட்ண விசாரணை நடத்தினார். படகம என்னுமிடத்தைச் சேர்ந்த எதிரியான கோவிந்தன் ஜோசப் என்பவர் ஒரு. ஐ. ஆர். சி. என்றும் விசாரணையில் தெரியவந்தது.

## இடமாற்றம்

சுழிபுரம், செவ்வாய்

பண்டத்தரிப்பு பகுதியில் கிராமசேவையாளராகக் கடமையாற்றியதிரு. பிரான்சிஸ் கொட்டைக்காட்டுப் பகுதிக்கு இம்மாதம்முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

படும் கிறிஸ் கத்தியொன்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இறந்தவரின் உடலில் 12 காயங்கள் காணப்பட்டன என்று பிரேதபரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபரை ஜூன் மாதம் 12-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவு போட்டார்.

0 0 0

## பாரதி இசைக்கழகம்

தம்பலகமம் பட்டிமேடு சித்திவிநாயகர் முறையில் கோ. சண்முகராசா தலைமையில் பாரதி இசைக் கழகத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெற்றது. உத்தியோகத்தர்கள் விபரம் பின்வருமாறு; தலைவர் திரு. சண்முகராசா, உப தலைவர் திரு. புண்ணியம், செயலாளர் திரு. சிவராசா, பொருளாளர் திரு. இந்திரகுமார்.

0 0 0

## கலைமகள் மாதர்சங்கம்

தம்பலகமம் நாயன்மார்திடலில்உள்ள நாமகள் சனசமூக நிலையத்தில் கலைமகள் மாதர் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் நடைபெற்றபோது புதிய நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவி: திருமதி தெய்வநாயகி சின்னராசா, உப தலைவி திருமதி நாகேஸ்வரி செல்வராசா, செயலாளர்: திருமதி செல்லக்கண்டு சித்திரவேல், உபசெயலாளர்: திருமதி பத்மாவதிஉருத்திரமூர்த்தி, பொருளாளர்: திருமதி தங்கநாச்சியார் அமரசிங்கம்.

0 0 0

## நகரசபைத்தலைவர் எச்சரிக்கை

சுகாதார அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சிலர் லஞ்சம் வாங்குவதாகவும் பலவித ஊழல்களை செய்துவருவதாகவும் தமக்குப் பொதுமக்களிடமிருந்து பல புகார்கள் கிடைத்துள்ளதாகவும் அத்தோடு வெளிநோயாளர்களுக்கும் அங்கு விஜயம் செய்வோருக்குமாக மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்கு சுகாதார திணைக்களம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்களின் பலத்த கண்டனத்திற்கு உட்பட்டிருக்கும் மின்சாரப்பகுதி உடனடியாக நிலைமையை சீராக்கி செயலாற்றவேண்டுமென்றும் தவறினால் இந்தப்பகுதிமேல் தாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் திருக்கோணமலை நகரசபைத்தலைவர் டாக்டர் எஸ் சிவானந்தன் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அடிப்படை விதி வகைகளை ... துக்காட்டினர்.

## 'ஈழநாடு' புளுகுப் போட்டி - (6)

நேயர்கள் பலர் இப்போட்டிக்கு சந்திரனையும் அப்போலோ வீரர்களையும் பற்றியே அதிகமாக எழுதுகிறார்கள். அப்போலோபயணம்தான் முடிந்துவிட்டதே! இனிமேல் வறு துறைகளில் உங்கள் கற்பனையை செலுத்தலாமே!

### பரிசுபெறும் புளுகு

5-வது போட்டியில் மிகச் சிறந்ததென்று தெரிவு செய்யப்பட்ட புளுகு பின்வருமாறு:

'இலங்கையில் தற்போது பரவிவரும் ஒரு வகை காய்ச்சலுக்கு தமது பெயர் இடப்படுவதை ஆட்சேபித்து சீனத்தலைவர் மா வோ ஒரு வார உண்ணாவிரதம் மேற்கொள்ள இருக்கிறார். குறித்த காய்ச்சலை 'நிக்சன் காய்ச்சல்' என்று பெயரிட்டழைக்கும் பட்சத்தில் உத்தேச உண்ணா விரதம் கைவிடப்படுமாம். இதற்கிடையில் தமிழ் சினிமா நடிகைகளில் பலர், இந்தக் காய்ச்சலுக்கு தங்கள் பெயரை இடுமாறு வேண்டியுள்ளனர்.'

இதை எழுதியவர்: செல்வி. பி. சகிகலா, 23/5, எல்லை வீதி, மட்டக்களப்பு.

### பாராட்டுக்குரியவை

மிகச் சிறந்தவையென போட்டிக்குழு தெரிவு செய்தவற்றை எழுதிய நேயர்கள் முறையே பின்வருமாறு;- எவ். ஏ. வில்லியம்ஸ், 60/9, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். பொ. அருணகிரிநாதன், 76 ஏ, கோவில் வீதி, யாழ்ப்பாணம். சி. அருணாசலம், இடைக்குறிச்சி, வரணி. சி. அன்னலட்சுமி, செல்லப்பிள்ளையார் வீதி மட்டுவில் தெற்கு.

### அடுத்த போட்டி

ஆறுவது போட்டிக்கு உங்கள் கற்பனையை பறக்க விட்டு நகைச்சுவையுடன் ஒரு புளுகை தீட்டுங்கள், பார்ப்போம்.

### நிபந்தனைகள்

ஒருவர் எத்தனை புளுகுகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு புளுகுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்பட வேண்டும். அனுப்ப வேண்டிய விலாசம்: புளுகுப்போட்டி (6) 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49 யாழ்ப்பாணம்.

விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள வேண்டாம். ஈழநாடு ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் புளுகுக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-)பரிசுப் பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 8-6-69. வெற்றிபெறும் புளுகும் அதைப் புனைந்தவரின் பெயரும் 11-6-69 இல்வெளியாகும்.

'ஈழநாடு'

புளுகுப் போட்டி - 6

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................


## அண்ணா சொற்பயிற்சி மன்றம்

330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

OO பேச்சாளராக விரும்பினால் விண்ணப்பியுங்கள். நிபந்தனைகளனுப்பப்படும்.

OO போயா தினங்களில் பயிற்சிகள் நடைபெறும்.

OO ஆண், பெண் அனைவரும் உறுப்பினராகலாம். குறிக்கப்பட்ட தொகையினர்மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பொறுப்பாளர்: புதுமைலோலன்

OOO விரைவில் ஆரம்பமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இராணுவம் பாதுகாப்பு

## தெலிங்கானா போராட்டம் ஆந்திராவில் தீவிரம்

### பொலிஸ் சுட்டதில் ஐவர் பலி; பிரதமருடன் முதல்வர் ஆலோசனை

ஹைதராபாத், ஜூன் 3
ஆந்திராவின் இரு முக்கிய நகரங்களான ஹைதராபாத்திலும் சொக்கந்திரபாத்திலும் இன்று நடைபெறும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக இராணுவம் அழைக்கப்பட்டிருக்கிறது. பரீட்சை நடாத்துவதற்கு ஒத்துழைப்பளிப்பதில்லையென முன்னர் தீர்மானித்திருந்த ஆசிரியர் சங்கம் அந்தத் தீர்மானத்தை மாற்றிக் கொண்டு பரீட்சை நடைபெற உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதெனத் தீர்மானித்திருக்கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் மாமூல் வாழ்க்கையையும், சில அத்தியாவசிய சேவைகளையும் பராமரிப்பதற்கு ஓர் அவசரசட்டத்தை ஆந்திர ராஜிய கவர்னர் பிரகடனம் செய்தார். இச்சட்டம் உடனடியாக அமுலுக்கு வருகிறது.

திங்கட்கிழமை தெலிங்கானா முழுவதிலும் நடந்த பொது ஹர்த்தாலின்போது பல இடங்களில் பலாத்காரச் சம்பவங்கள் நிகழ்ந்தன. தீவைப்பு, கல்வீச்சு கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றன. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு ஹைதராபாத்திலும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தில் ஹைதராபாத்தில் இருவரும், வாரங்கலில் இருவரும் மாண்டனர். ஹைதராபாத்தில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

ஹைதராபாத்தில் செஞ்சல்குடா மத்திய சிறைச்சாலையில் தெலிங்கானா சத்தியாக்கிரகிகள் மீது நடந்ததாகக் கூறப்படும் தடியடிப்பிரயோகத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாக தெலிங்கானாபிரஜா சமிதியும் மாணவர் நடவடிக்கைக் குழுவும் தெலிங்கானா முழுவதிலும் ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தன.

#### முதன்மந்திரி பிரதமர் ஆலோசனை

தனித் தெலிங்கானா ராஜ்யம் அமைக்கக் கோரிநடைபெற்றுவரும் கிளர்ச்சிகள் மோசமாகிவருவதால் அடுத்துஎன்ன செய்யலாம் என்பது பற்றி ஆராய்வதற்காக ஆந்திர ராஜ்ய முதன் மந்திரி திரு. பிரமானந்த ரெட்டி இன்று புதுடில்லி போய்ச்சேர்ந்தார். பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடனும் உதவிப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்துவார்.

சென்றஞாயிற்றுக் கிழமை ஆந்திராவின் பல இடங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

ஹைதராபாத்தில் தென் மத்திய ரயில்வேயில் ஜத்செர்லா ரயில் நிலையத்தில் ஒரு ரயிலை தெலிங்கானா கிளர்ச்சிக்காரர்கள் 40 நிமிஷ நேரம் நிறுத்திவைத்தனர். ரயில் பாதையில் அவர்கள் உட்கார்ந்து கொண்டு ரயில் புறப்பட முடியாதபடி தடுத்தனர். பொலிசார் வந்து அவர்களை அப்புறப்படுத்திய பின்னரே ரயில் புறபட்டு செல்ல முடிந்தது. உஸ்மானியா ஆஸ்பத்திரி அருகில் அரசாங்கபஸ் ஒன்றைக் கொளுத்த சுமார் 600 மாணவர்கள் முயற்சி செய்தனர். பொலிசார் தலையிட்டுத் தடுத்தனர். பஸ்ஸின் கண்ணாடி ஜன்னல்கள் நொறுக்கப்பட்டன ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டசில சத்தியாக்கிரகிகளைச் சரியாகக் கவனிக்கவில்லையென்றபுகாரின்மீது இச்சம்பவம் நடந்தது.

ஐக்கிய ஆந்திர பிரதேச தீவிர ஊழியர் ஒருவரின் சகோதரரை உயிரோடு கொளுத்த சில விஷமிகள் முயற்சி செய்தனர். பொலிசார் தலையிட்டுத் தடுத்தனர்; ஆயினும் தீக்காயங்களுடன் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

#### தனிக்காங்கிரஸ்

தெலிங்கானா காங்கிரஸ் ஊழியர்கள் மகாநாடு ஹைதராபாத்தில் நடந்தது. தெலிங்கானாவுக்குத் தனியானபிரதேசகாங்கிரஸ் அமைக்கப்பட்டது.

ஆந்திர முன்னாள் தகவல் மந்திரி திரு. கொண்டா லட்சுமண் பாபுஜி தலைமையில் நடந்த இம்மாநாடு, தனிதெலிங்கானா ராஜ்யம் உடனடியாக அமைக்கப்படவேண்டுமெனக் கோரியது. பிரும் மானந்தரெட்டி மந்திரிசபையைக் கலைத்து ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப் படுத்த வேண்டுமென்றும் மகாநாடு கோரியது.

## சிங்கப்பூர் நடவடிக்கை

சிங்கப்பூர், ஜூன் 3
மலேஷியாவிலிருந்து தரை மார்க்கமாகச் சிங்கப்பூருக்கு வருவோர் மீது சிங்கப்பூர் அரசாங்கம் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. விரும்பத்தகாதவர்கள் சிங்கப்பூருக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகச் சிங்கப்பூர் பொலிஸ் அதிபர் தெரிவித்துள்ளார். விமானத்தில் வருபவர்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

## மாணவர்மீது தடியடி

கல்கத்தா, ஜூன் 3
கல்கத்தாவில் துர்காபூருக்கருகில் நடந்த மாணவர் கிளர்ச்சியொன்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் நூற்றுக் கணக்கான மாணவர்காயமடைந்தனர். ஆயிரம் மாணவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

## வேலைநிறுத்தம் முடிந்தது

புதுடில்லி, ஜூன் 3
இந்தியன் எயர் லைன்ஸ் விமானிகளின் வேலைநிறுத்தம் முடிவடைந்தது. விமானச் சேவைகள் இன்று வழமைபோல் நடைபெறத் தொடங்கியுள்ளன.

## 'கவிஞர்களை மதிக்கவேண்டும்'

– அமைச்சர் சுப்பையா

சென்னை, மே 3
''இலக்கியத் திருடர்கள் எழுத்துத் துறையில இருக்கும் பொழுது தமிழ் எழுத்தாளர் நிலை உயர்ந்ததாகக் கூறுவதற்கில்லை.

வடபகுதியில்

## உருளைக்கிழங்கு நன்றாக விளையாததற்கு காரணம்

அராலி, செவ்வாய்
''உருளைக்கிழங்குச் செய்கையை வரண்ட பிரதேசத்தில் வெற்றிகரமாக நடத்திப் புகழ் பெற்ற பெருமை யாழ். மாவட்ட விவசாயிகளுக்குண்டு. ஆனால் சில வியாபாரிகள் விளை பொருட்களை விற்பனை செய்வதற்கு தரகர்களை நம்பி நாட்டிற்கு துரோகஞ் செய்கிறார்கள். கிழங்கு பூரண வளர்ச்சி பெறுமுன்னரே, சந்தை விலை உயர்வைப் பயன் படுத்தி கூடிய பணம் சம்பாதிக்கலாமென்ற பேராசையினால், தரகரின் தூண்டுதலின் பேரில் அறுவடை செய்து கொழும்பிற்கு அனுப்பிவிடுகிறார்கள்- இந்தப் பருவத்தில் கிழங்கு சரியாக வெந்து மென்மை தராது. இதனால் யாழ்-மாவட்டத்தில் தரமான உருளைக்கிழங்கு விளைவிக்க முடியாது என்று மேலதிகாரிகள் சாட்டுக் கூறி இப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான விதை உருளைக்கிழங்கைத் தரமறுக்கிறார்கள். இதே போலவே சின்ன வெங்காயமும்.''

இவ்வாறு யாழ்-மாவட்ட விவசாய விசாலிப்பு உத்தியோகத்தர் திரு. பொ. மாணிக்கவாசகர் மாதகலில் விவசாயிகளுக்கான செய்முறைப் பயிற்சி வகுப்பு ஒன்றில் பேசுகையில் எடுத்துக் கூறினார்.

வலி-மேற்குப் பகுதியிலுள்ள பல கிராமங்களிலிருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர்.

## நாவலருக்கு சிலை நிறுவ ஏற்ற இடம் அனலைதீவு

### என்கிறார் கிளிநொச்சி எம். பி.

அனலைதீவு, செவ்வாய்
'சைவத்தை வளர்ப்பதையே தமது நோக்கமாகக்கொண்ட ஆறுமுகநாவலருக்கு தனிச்சைவம் தழைத்தோங்கும் ஒரு கிராமத்திலேயே சிலை எழுப்பப்படவேண்டும். வேறுமதத்தினர் ஒருவரேனும் இல்லாமல் தனிச்சைவ மக்கள் மட்டுமே வாழுகின்ற அனலைதீவிலேயே நாவலருக்குச் சிலை எழுப்புவது சாலவும் சிறந்தது.'

இவ்வாறு அனலைதீவில் நடைபெற்ற காந்தி நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புச்சொற்பொழிவாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

நாவலருக்கு சிலை எழுப்புவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் தனிச்சைவ மக்கள் மட்டும் வாழுகின்ற அனலைதீவு நாவலருக்குச் சிலை எழுப்புவதற்கு உகந்த இடமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறிய திரு. கா. பொ. அனலைதீவு இவ்விடயத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:-

வள்ளுவரின் அரசியல் தருமத்தையே காந்திஜீ பின்பற்றினார். வள்ளுவம் இலக்கணமாக அமைய காந்தீயம் இலக்கியமாக அமைந்தது. பல இன்னல்களுக்கு இடையிலும் அவர் வள்ளுவத்தைக் கடைப்பிடித்தபடியால் அவருக்கு நாம் இப்போதும் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டும்.

அனலைதீவு மத்திய சனசமூக நிலையத்தினரின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழா அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர் திரு. வி. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் க. இளையதம்பி, சி. காராளபிள்ளை, சு. இரத்தினசபாபதி, சேனாதிராசா, அறிவழகன், நா. சுப்பிரமணியம், ஆ. தியாகராசா ஆகியோரும் பேசினர்.

## எந்தப் பிரச்னையையும் பேசித் தீர்க்கலாம்

### பாகிஸ்தானுக்கு இந்தியா பதில்

புதுடில்லி, ஜூன் 3
இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் தீர்க்கப்படாமலிருக்கும் சகல பிரச்னைகளையும் தாஷ்கண்ட் உடன்படிக்கையின்படி இரு நாடுகளுக்கிடையிலும் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள இந்தியா தயாராக இருப்பினும் இந்தியாவின் உள்விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்காது என்றும் இந்தியா தெரிவித்திருக்கிறது.

பாதுகாப்புச் சபைக்குப் பாகிஸ்தான் அனுப்பிய மூன்று கடிதங்களுக்கும், ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற சம்பவங்கள் சில பற்றி இந்தியாவுக்கு நேரடியாகப் பாகிஸ்தான் அனுப்பிய குறிப்புகளுக்கும் அளித்துள்ள பதிலில்தான் இந்தியா இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

தாஷ்கண்ட் பிரகடனம் எந்த உணர்வுடன் செய்யப்பட்டதோ அந்த உணர்வுடனும், அந்தப் பிரகடனத்திலுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் மதிப்புக் கொடுத்தும் அதைச் செயற்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதாகவும் இந்தியா தெரிவித்திருப்பதுடன் காஷ்மீரில் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமிப்புச்செய்து தொடர்ந்து அதைத் தன் வசம் வைத்திருப்பது சட்ட விரோதமானதென்றும் அதுதான் இப்போதுள்ள பிரச்னையென்றும் இந்தியா தனது பதிலில் தெரிவித்திருக்கிறது.

## மனைவி கணவனுடன் செல்ல மறுப்பு

### விசாரணை ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, செவ்வாய்
முல்லைத்தீவு வண்ணாங்குளத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளையின் மனைவி செபமாலை என்பவரால் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஜீவனாம்ச வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதிவாதியான சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக்காக புரக்டர் பி.என். றெஜினோல்ட் ஆஜரானார்.

பிரதிவாதி தமது மனைவியை தம்முடன் அழைத்துச் செல்ல விரும்புவதாக அவர் நீதிபதியிடம் எடுத்துக் கூறினார். இதற்கு மனைவியான செபமாலை மறுப்புத் தெரிவிக்கவே நீதிபதி மேல் விசாரணையை ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தமிழ் ஆசிரியருக்கு சேவைப் பயிற்சி

பருத்தித்துறை, செவ்.
க. பொ. த. வகுப்புகளில் தமிழ்மொழி பயிற்றும் ஆசிரியர்களுக்கான சேவைப் பயிற்சிஇம்மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில்...

## இலங்கைக்குநல்ல எதிர்காலம்

பருத்தித்துறை, செவ்.
'தொண்டமானாறுநன்னீர் திட்டத்தின்மூலம் அயலிலுள்ள உவர் நிலங்களை நன்செய் நிலங்களாக்குவதுடன் தொண்டமானாற்றையேபல்வகை மீனினங்களின் உறைவிடநிலையமாக்கவும் முடியும். இவ்வித ஆக்கபூர்வமான திட்டத்திற்காக நம்மவர்கள் வெளிநாடுகள் சென்று நடாத்தும் ஆராய்ச்சிகள் மூலம் எமது நாட்டுப் பொருள்வளத்தைப் பெருக்கலாம்'.

இவ்வாறு வடபகுதி விஞ்ஞான வித்தியாதிகாரி திரு. எம். அற்புதநாதன், விஞ்ஞான உயர்கல்வி காரணமாக அமெரிக்கா செல்லும் விஞ்ஞான ஆசிரியர் திரு. கே.எஸ். குகதாசனுக்குவடமாநில நீரியல், உயிரியல் சங்கம் அளித்த பிரிவுபசார விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வாடி வீட்டில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. பீ. சபாரத்தினமும் பேசினார்.

திரு. குகதாசன் நன்றிகூறினார்.

## கரைவாகு கி. ச. கோரிக்கை

சாய்ந்தமருது, செவ்.
கடுகதி பஸ்கள், சாய்ந்தமருது கிராமத்தில் ஓரிடத்தில் நிறுத்தப்படவேண்டும் என்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த பிரயாணிகள் இவ்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கலில் இருவரும் மாண்டனர். ஹைதராபாத்தில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தி ஒருவர் உயிரிழந்தார்

...அவர்கள் உட்கார்ந்து கொண்டு ரயில் புறப்பட முடியாதபடி தடுத்தனர்.

...ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப் படுத்த வேண்டுமென்றும் மகாநாடு கோரியது.

# போர்ப் பயிற்சியிலீடுபட்ட கப்பல்கள் மோதி 70 பேர்பலி

மணிலா, ஜூன் 3

தென் சீனக்கடலில் மணிலாவுக்கு சிறிது தூரத்தில் பயிற்சியிலீடுபட்டுக் கொண்டிருந்த அமெரிக்க நாசகாரி ஒன்றும் ஆஸ்திரேலிய விமானந்தாங்கிக்கப்பல் ஒன்றும் மோதிக்கொண்டதில் அமெரிக்க கடற்படை வீரர் எழுபதுபேர் கடலில் மூழ்கி மாண்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. விமானந்தாங்கியும் நாசகாரியும் மோதியதில் அமெரிக்க நாசகாரிக் கப்பலின் முன்பகுதி இரண்டாகப் பிளந்து உடைந்து நீரில் அமிழ்ந்தது. 'சியாட்டோ' எனப்படும் தென் கிழக்காசிய இராணுவக் கூட்டமைப்புநாடுகளுக்கிடையில் நடைபெற்றுக்கொண்டிருந்தபயிற்சி, இந்தவிபத்துக்காரணமாக உடனடியாக நிறுத்தப்பட்டது

விபத்தில்சிக்கி கடலில் அமிழ்ந்தவர்களில் ஆறுபேர் தான் மீட்கப்பட்டதாகவும் காணுமல் போன வீரர்களின் சடலங்களைத் தேடும் வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## அண்ணு நினைவுக் கல்

வேலூர், ஜூன் 3

காலஞ்சென்ற திரு. அண்ணுதுரை ஒரு தடவை விலைவாசிகள் உயர்வை எதிர்த்துப் போராட்டத்தில் கலந்துகொண்ட பொழுது கைது செய்யப்பட்டு வேலூர் மத்திய சிறையில் வைக்கப்பட்டார் இச்சிறைச்சாலையில் அவர் இருந்த அறையில் நினைவுக் கல் ஒன்றைத் தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி திறந்துவைத்தார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய திரு. கருணாநிதி 'சிறைகள் சீர்திருத்த முகாங்களாக விளங்கவேண்டும். அண்ணு, ராஜாஜி போன்ற பெரியார்கள் இருந்து வந்த சிறைச்சாலை அறைகளைப் பார்க்கும் போதெல்லாம் நாங்கள் நல்லவர்களாக விளங்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறவேண்டும். சிறையிலுள்ள வசதிகளைக் கைதிகள் பயன்படுத்தித் திருந்திக்கொள்ள வேண்டும் எனக் கூறி அண்ணு வைக்கப்பட்டிருந்த அறையில் கைதிகள் பலரும் வைக்கப்படமாட்டார்கள் என்றும் அது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுவரும் என்றும் தெரிவித்தார். இதே அறையில் அண்ணுவின் உருவப்படம் ஒன்றும் திறந்துவைக்கப்பட்டது.

## இலங்கையை காப்பாற்ற தி. மு. க தடைவேண்டுமாம்

நுவரேலியா, திங்கள்

நுவரேலியா பகுதியில் உள்ள மக்களைத் தமிழ்ப் படங்களைப் பகிஷ்கரிக்கும்படி தூண்டுவதற்கு 'எக்சத் சிங்கள பெரமுன' முயற்சி செய்து வருகிறது இதற்கென பெரியதொரு இயக்கமொன்றையும் இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வியக்கத்துக்கு இப்பகுதியில் பெரும் ஆதரவு கிடைத்துள்ளதாம். இலங்கை பூராவும் இவ்வியக்கத்தை விஸ்தரிக்க 'எக்சத் சிங்கள பெரமுன' நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. நாட்டுப்பற்றுள்ள சகல மக்களும் இவ்வியக்கத்துக்கு, ஆதரவளிக்கவேண்டுமென்றும், தி. மு. க.வை ஒழிப்பதற்கும் உதவவேண்டும் எனவும் கோரியுள்ளது.

தமிழ்ப்படங்களையும். தி. மு. க.வையும் ஒழித்துக் கட்டும் நோக்கோடு பிரஸ்தாப பெரமுனவின் காரியதரிசி மலைநாட்டுப்பகுதிகளில் ஆச்சங்கத்தின் கிளை நிறுவனங்களை நிறுவியுள்ளார். இப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு சிங்கள மக்களுக்கும் துண்டுப்பிரசுரங்களில் 'வாஸ்கவி' எழுதி வழங்கி அதை கதிர்காமத்தை நினைத்து இலங்கையைத் தி மு. க.விடம் காப்பாற்றும்படியும் கேட்டுக்கொண்டுள்ளது.

## மாணவியின் சங்கிலி அபேஸ்

சுழிபுரம், செவ்

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியின் சங்கிலியை இனந்தெரியாத ஒருவர் அபகரித்துச் சென்றுவிட்டதாக சங்கானை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பண்ணுகம் மெய்கண்டான் உயர்தர மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் ஒரு மாணவியிடமிருந்து நேற்று முன்தினம் 350 ரூபா பெறுமதியான சங்கிலி களவாடப்பட்டுள்ளதாக புகாரில் தெரிவித்துள்ளனர்.

ஆசைவார்த்தைகூறிகுறிப்பிட்ட மாணவியை ஒருவர் யாருமில்லாத இடத்துக்கு அழைத்துச்சென்று இவ்விதம் செய்துள்ளதாகத் தெரிகிறது.

## "உயர்வுக்கு பயன்படுத்த வேண்டும்"

பருத்தித்துறை, செவ்வாய்

"நான் என்னும் அகந்தையை வழிப்படுத்தி வளம்படுத்தி சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்தல்வேண்டும். 'நான்' என்ற அகந்தை தீயைப் போன்றது. சரியாக உபயோகித்தால் பயனுண்டு. தவருக உபயோகித்தால் அழிவுண்டு. அமெரிக்காவில் விண்வெளிக் கப்பலும் 'நான்' என்பதன் ஒரு தோற்றம் என்று கூறலாம்."

இவ்வாறு நல்லூர் குருகுல வித்தியாசாலை ஆண்டு விழா நல்லூர் சடையம்மா மடத்தில் நடந்தபோது சிறப்புச் சொற்பொழிவாற்றிய பண்டிதர் திரு. க. வீரகத்தி கூறினுர்.

ஸ்ரீ சுவாமிநாத சாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்து பேசிய திரு. வீரகத்தி கூறியதாவது:

''நான்'' என்பதைச் சரியாக வளம்படுத்தாத காரணத்தாலேயே தமிழை வளர்ப்போருக்குப் பொல்லடியும், தமிழின் பெயரைச் சொல்லி வாழ்வோருக்கு மலர்மாலையும் கிடைக்கின்றன. ஒரு நாட்டில் சர்வாதிகாரம் தலை தூக்குவதற்கும், கொலைகள் மலிவதற்கும் இதுவே காரணம்.

சென்னை, மே 3

''இலக்கியத் திருடர்கள் எழுத்துத் துறையில இருக்கும் பொழுது தமிழ் எழுத்தாளர் நிலை உயர்ந்ததாகக் கூறுவதற்கில்லை. அரசியல், சமூக சீர்திருத்தங்கள் பற்றி கவிகள் பாடுபவர்களை உயர்ந்தவர்களாக மதிக்காதநிலை வருந்தத்தக்கது. எழுதுபவர்கள் லாப நோக்குடன் செயல்படாமல் நாட்டின் நன்மையையே கருத்தில் கொண்டு செயல்படவேண்டும்''.

தமிழ் எழுத்தாளரின் 16-வது ஆண்டு மகாநாட்டில் நடைபெற்ற கவி அரங்கத்திற்கு முடிவுரையாற்றிய தமிழ்நாடு அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா மேற்கண்டவாறு கூறினுர்.

இக் கவியரங்கத்திற்கு திரு. கொத்தமங்கலம்சுப்பு தலைமை தாங்கினுர். உண்மை உயர் என்ற தலைப்பில் பத்து கவிஞர்கள் தாங்கள் இயற்றிய பாடல்களைப் பாடினர்.

இக் கவியரங்கத்திற்குப் பின்னர் பேராசிரியர் க. அன்பழகன் தலைமையில் சிறப்புச்சொற்பொழிவுகள் நடைபெற்றன. இந்த சொற்பொழிவு நிகழ்ச்சியில் திரு. கி. வா. ஜெகநாதன், திருமாறன், திரு. ம. பொ. சிவஞானம், திருமணுளன் ஆகியோர் பங்குபற்றினர். இவ் வைபவத்தில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எழுத்தாளர் புதுமைச்சித்தனுக்கு ரூபா 1105 வழ்ங்கினுர்.

## தாமதம் ஏன்?

சாய்ந்தமருது, செவ்.

கரைவாகுதெற்கு சாய்ந்த மருது கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதிக்கு இறப்பு-பிறப்புப் பதிவுக்காரர் ஒருவர் தேவையென்ற மக்களின் வேண்டுகோளுக்கிணங்க உள்நாட்டமைச்சரின் உத்தரவின் பேரில் கடந்த அக்டோபர் மாதம் 5-ம் திகதி சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. நாராயணசாமி தலைமையில் நேர்முகப்பரீட்சை ஒன்று நடைபெற்றது. இப்பரீட்சைக்கு ஆறு பேர் தோற்றியிருந்தனர். ஆனுல் ஏழு மாத காலங்களாகியும் இதன் முடிவு இன்னும் வெளியாகவில்லையாம். இதனுல் இப்பகுதி மக்கள் கஷ்டமுறுகின்றனர்.

...மக்கள் மட்டும் வாழுகின்ற அனலைதீவு நாவலருக்குச் சிலை எழுப்புவதற்கு உகந்த இடமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறிய திரு. கா. பொ. இரத்தினம், இலங்கையில்

...திருவாளர்கள் க. இளையதம்பி, சி. காராளபிள்ளை, சு. இரத்தினசபாபதி, சேனுதிராசா, அறிவழகன், நா. சுப்பிரமணியம், ஆ. தியாகராசா ஆகியோரும் பேசினர்.

## திருக்குறளை ரஷ்ய அறிஞர்களே புகழ்கின்றனர்

— பண்டிதர் இரத்தினம்

உடுப்பிட்டி, செவ்.

'திருக்குறள் வாழ்வோடு இணைந்து அறநூலாகவும், நீதிநூலாகவும்அறிவுக்களஞ்சியமாகவும் விளங்குகிறது. நம்மில் ஒரு சாரார் திருக்குறள் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகக் கூறுவது நம்பமுடியாதது'.

மேற்கண்டவாறுதமிழகத்தைச்சேர்ந்த சித்தாந்த வித்தகர் திரு எஸ். சோமசுந்தரம் செட்டியார் கூறினுர். கருணையம்பதி இளைஞர்முன்னேற்றக்கழகத்தினரின் 13-வது ஆண்டு வள்ளுவர் நினைவு, 2000ஆண்டுநிறைவு விழா இரண்டாம்நாள் நிகழ்ச்சியின்போது அவர் சிறப்புச்சொற்பொழிவாற்றினுர்.

இரண்டாம்நாள் விழாவிற்குத் தலைமைவகித்த கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம்கூறியதாவது:-

காலம்,கொள்கை, நாட்டு மக்களுக்கேற்ற சூழ்நிலைக்கமைய நூல்கள் உருவாக வேண்டும். இத்தகைய அம்சங்கள் பொருந்தியதும், எந்தநாட்டிற்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியது திருக்குறள் ஒன்றே என ரஷ்ய அறிஞர்கள்கூறியுள்ளனர்.

விடுவிக்கமுடியாதபிரச்னை தோன்றிய பொழுதிலும், இக்கட்டான சூழ்நிலையிலும் திருக்குறள் கைகொடுத்துத் தூக்கிவிடும் நண்பன்போல் விளங்குகின்றது. பெரியோரை மதித்து நடக்கும் பண்புவேண்டுமென வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார். பெரியோர்களோடு பழகுவதால் நாமும் சிறப்புப்பெறலாம்.

கருத்தரங்கில் 'நாடுசெழிப்புற நன்மக்கள்' என்றதலைப்பில் திரு. க. சிவராமலிங்கமும் மற்றும் கவிஞர் வி. கந்தவனம் திரு. இ. மகாதேவன், புலவர் க. சிவானந்தன், திரு.க. சொக்கலிங்கம் ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

ராஜ் கலாமன்றத்தாரின் 'சக்கடத்தார்', கழகத்தினரின் 'ஐந்து லட்சம்' ஆகிய இரு நகைச்சுவை நாடகங்களும் இடம்பெற்றன.

## ஆங்கிலதினம்

திருகோணமலை, செவ்.

தம்பலகமம் பகுதி பாடசாலை மாணவர்கள் ஆங்கில தினத்தைக் கொண்டாடினர் தம்பலகமம் மகாவித்தியாலய அதிபர் திரு. பி. சித்திரவேலுவால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தஇவ் விழாவில் ஆங்கிலப் பிரிவுக்கான மாவட்ட பாடசாலைகளின் பரிசோதகர் திரு. எஸ்.சிவபாதம்பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டார்.

## புதிய நிர்வாகிகள்

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவு சமூகமுன்னேற்றச் சங்க 9-ம் ஆண்டுவிழா நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

காப்பாளர்: திரு. என். சுவாம்பிள்ளை, தலைவர்: திரு. ரி. மரியாம்பிள்ளை உபதலைவர்: திரு. ரி. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர்: திரு. சு. கணபதிப்பிள்ளை, உபசெயலாளர்: திரு. அ. யோ. சத்தியபால், பொருளாளர்: திரு. ப. புலேந்திரன், உபபொருளாளர்: திரு. சி. கணபதிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்: திரு.ப.பிரான்சிஸ்சேவியர். 5 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

வல்வெட்டித்துறை,செவ்.

பருத்தித்துறை நெல்லண்டை அம்மன் கோவில் பொதுக்கூட்டம் கோவில் மண்டபத்தில் திரு. எம். கந்தசாமி தலைமையில்நடைபெற்றது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: எம். கந்தசாமி,உபதலைவர்: வி. நடராசா, காரியதரிசி: ஏ கார்த்திகேசு, உபகாரியதரிசி: வி. சிவலிங்கம், தனுதிகாரி; எஸ். முருகுப்பிள்ளை, முகாமையாளர், எம். சுப்பிரமணியம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினராக 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை, செவ்.

க. பொ. த. வகுப்புகளில் தமிழ்மொழி பயிற்றும் ஆசிரியர்களுக்கான சேவைப் பயிற்சிஇம்மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் வடமாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலத்தின் ஆரம்பவுரையுடன் நடைபெறும்,

இதில் திருவாளர்கள் சோ. நடராசன், சு.வேலுப்பிள்ளை, ஏ. வி. மயில்வாகனம், சி. எஸ். குலரத்தினம், செ. வேலாயுதபிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

சாய்ந்தமருது, செவ்.

கடுகதி பஸ்கள், சாய்ந்தமருது கிராமத்தில் ஓரிடத்தில் நிறுத்தப்படவேண்டும் என்றும் சாய்ந்தமருதைச் சேர்ந்த பிரயாணிகள் இவ்வசதி இல்லாததால் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் என்றும் இதை நீக்கும்படியும் மட்டக்களப்பு டிப்போ இ. போ. ச. மனேஜரைக் கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்றைக் கரவாகு தெற்கு கிராமசபை அனுப்பிவைத்துள்ளது இதன் பிரதி போக்குவரத்து அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


ஈழநாடு' பத்தாண்டு நிறைவுவிழா

## 26 மைல் மரதன் ஓட்டம்

(14—6—69)

### விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ..............................

விலாசம்
..............................
..............................

வயது: ..............................
1—6—69

..............................
கையொப்பம்

### போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத் தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும் போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜூன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜூன் மாதம் 5-ம் திகதிக்குமுன் 'ஈழநாடு', த. பெ. எண்-49, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'எனது நம்பிக்கையின் முதற்படி அஹிம்சை. கடைசிப்படியும் அஹிம்சையே'.

-மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 22-ந் திகதி (4-6-69)


## தொழில்நுட்பக் கழகம்

யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட தொழில் நுட்பக் கழகத்தை விரைவில் அமைக்க வேண்டுமென்று கோரும் தீர்மானமொன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை சிலதினங்களுக்கு முன்னர் நிறைவேற்றியது. யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த தொழில் நுட்பப் பகுதி உதவிக் கல்வி டைரக்டர் ஜெனரலைச் சந்தித்த மூன்று தூதுகோஷ்டியினரும் யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட தொழில்நுட்பக் கழகத்தை விரைவில் அமைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டியிருந்தனர். கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் சிரேஷ்ட தொழில்நுட்பக் கழகம் விரைவில் அமைக்கப்படுமென்று அவரும் பதிலளித்துச் சென்றார். ஆனல் இது வரை அதற்கான முயற்சிகள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

நமது நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. இதற்கு நமது கல்விமுறைதான் காரணம் என்று பலரும் சொல்லி வருகின்றனர். கல்வி அமைச்சரும் நமதுநாட்டுக்குத் தேவையான, நமது நாட்டுக்கு ஏற்ற கல்வித்திட்டத்தை உருவாக்குவதற்காக உலகநாடுகள் பலவற்றுக்கும் சென்றுவந்தார். ஆனலும் நமது தேவையையும் நமது நாட்டுக்கு ஏற்ற கல்வித் திட்டத்தையும் அவர் உருவாக்கவில்லை. தேவையான விஷயங்களை விட தேவையற்ற, ஆனல் அரசியலில் சர்ச்சையையும் பிரச்னைகளையும் உருவாக்கக்கூடிய விஷயங்களில்கவனம்செலுத்துவதில் நமது கல்வி அமைச்சர் சமர்த்தர். யாழ்ப்பாணத்துக்கு கல்விஅமைச்சர் விஜயம் செய்திருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் மயங்கித்தானோ என்னவோ (இங்குவரும் அமைச்சர்கள் பெறும் வரவேற்பில் மயங்கி வாக்குறுதிகள் அளித்துச் செல்வது வழமையான சம்பவங்கள்) இங்குள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கழகத்தைப் பூரணவசதியுள்ள தொழில்நுட்பக்கழகமாக மாற்றுவதாக உறுதியளித்துச் சென்றார். கனிஷ்ட தொழில்நுட்பக் கழகத்தைப் பூரணவசதியுள்ள தொழில் நுட்பக்கழகமாக மாற்றியமைப்பதில் சிரமங்கள் இருக்கலாம். ஆனல் சிரேஷ்ட தொழில்நுட்பக் கழகம் அமைப்பதற்கு முப்பத்தைந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டபின்னரும் அதை நிறைவேற்றுவதற்குத் தயங்குவது ஏன் என்பதுதான் புரிந்து கொள்ள முடியாமலிருக்கிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் புற்றுநோயாளர் சிகிச்சைக்கென 'கோபோல்ட்' சாதனம் அமைப்பதற்கு சுகாதார அமைச்சர்கள் உறுதியளித்தனர். வவனியாவில் புதிய 'எக்ஸ்றே'கருவி தருவதாகவும் வாக்குறுதியளித்தனர். இவையெதுவும் நிறைவேறவில்லை. வவனியாவுக்கு வரவிருந்த 'எக்ஸ்றே' கருவி கொழும்பில் நின்றுவிட்டது. யாழ்ப்பாணத்துக்கு வரவிருந்த 'கோபோல்ட்'சிகிச்சைக் கருவி கண்டிக்குப்போகிறது. யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட தொழில்நுட்பக்கழகம்நிறுவுவதற்கென ஒதுக்கப்பட்டமுப்பத்தைந்துலட்ச ரூபாயும் வேறு எங்காவது போய் விடுமா?

தேசியஐக்கியம் பேசுபவர்களும் எவரையும் பாகுபாடாக நடத்தமாட்டோம் என்று கூறுபவர்களும் சிந்திக்க வேண்டியவிஷயம். சிந்தித்தால் மட்டும் போதாது செயலாற்றவும் வேண்டும்.

## ஆஸ்பத்திரி ஊழியர்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அத்தி...

அதை ஆண்டவன் கூட மன்னிக்கமாட்டான். அந்...

சாதிகள் இல்லையடி பாப்பா!

# முத்தியடைந்த ஆன்மாக்கள் ஒரு சாதி; முத்தியடையப் போகின்றவர்கள் ஒரு சாதி

## தீண்டாமை சைவத்துக்கு ஒரு சாபக்கேடு

— ஆத்மஜோதி நா. முத்தையா —

இது பாரதி யுகம்; காந்தி நூற்றாண்டு. ஒவ்வொருவரும் தாந்தாம் வகிக்கின்ற யுக தருமங்களை அனுஷ்டிக்க வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவார்கள். பாரதி யுகம், காந்தி யுகம், வள்ளுவன் யுகம் என்றெல்லாம் மார்தட்டிப் பேசுபவர்கள்; திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தங்களும் பாராயணம் செய்பவர்கள்; சாதி, சாதி என்று பேசுகிறார்கள். இதுவும் ஒரு யுக தருமம். இதுதான் கலியுக தருமம்.

மந்தாரமலர் கொய்யச் சென்ற வழியிலே வீமன் ஹனுமாரைச் சந்தித்துப் பல நல்லுபதேசங்கள் பெறுகின்றான். இது கலியுகம் பிறப்பதற்கு முன் நடந்த செய்தி ஹனுமார் பின்வருமாறு கூறுகின்றார்:

"கிருத யுகத்தில் சாதி பேதமே இல்லை என்றும், அவரவர்கள் தமது தருமத்தைத் தாமே நடத்தி வந்தார்கள்என்றும், திரேத யுகத்தில் தருமம் கால்வாசி குறைந்தபடியால் யாகாதி கிருதுக்கள் ஏற்பட்டன என்றும், நான்கு வருணங்கள் ஏற்பட்டு தருமங்கள் நன்றாய் நடந்துவந்தன என்றும், துவாபரயுகத்தில் தருமம் பாதியாய்விட்டது என்றும், வேதங்கள் நான்காய்ப் பிரிந்தன என்றும், கர்மாக்கள் அதிகரித்தன என்றும், மயான வைராக்கியம் முதலான ஆபாச வைராக்கியங்களால் சன்னியாசம் உண்டாயின என்றும், கலியுகத்தில் கால் பாகந்தான் இருக்குமென்றும், இதனல் ஜனங்களுக்குப் பலம் குறையும் என்றும், சகல வியாதிகளும் அவர்களைப் பிடிக்கும் என்றும், கர்மாக்கள் நஷ்டமாகும் என்றும் எடுத்துரைத்தார்."

தந்தையாருடைய தந்தையார் காலத்திலே ஆஸ்பத்திரிக்கோ, டாக்டரிடமோ போவது இழிவாகக் கருதப்பட்டது. அதுவும் அரசாங்க வைத்தியசாலைகளைத் தருமாஸ்பத்திரி என்று கூறி இழிவாகக் கருதிய காலம். தந்தையார் காலத்திலே ஒரு வைத்தியரே எல்லா ...

... செய்துமுடிக்கிற காரியத்திறமைக்குத் தக்கபடிதான் சிறப்புகள் கிடைக்கும். இதனை வள்ளுவர்பெருமான் வேறு இரு இடங்களிலேவலியுறுத்துகின்றார்.

'உள்ளத் தனைய துயர்வு'
'உள்ளுவ தெல்லாம்
உயர்வுள்ளல்'

மனத்தினல் உயர்ந்தவர்களே மனிதர்கள். கோயில்களில் ஏழு பிரகாரங்கள், ஐந்து பிரகாரங்கள் அமைத்துள்ளார்கள். அவற்றின் தத்துவம் என்ன? அவரவர் மனேபக்குவத்திற்குத் தகுந்தவர்கள் அந்தந்தப் பிரகாரத்தில் நின்று வணங்க வேண்டும் என்பதுதான் ஆகமநூல் கூறும் முடிபாகும். இதனை உள்ளுணர்வோடு பார்க்கும்போது எம்மில் பலர் கோபுர தர்சனத்தோடு திரும்பவேண்டியவர்களே.

சமூக வாழ்க்கையில் மொழி, மதம், ஆசாரம், தொழில், பண்பாடு இவைகளாலும் இயற்கையில் தட்ப வெப்பம், சூழ்நிலை, உடலமைப்பு இவைகளாலும் மக்களிடையே பல்வேறுபிரிவுகள் உண்டாயின. சாதிகளின் தோற்றம் தொழில் பிரிவினையால் உண்டாயிற்றென்றும் பரம்பரையாக ஒருதொழிலைச்செய்யும் கூட்டங்கள் சாதிகளாயின என்றும் 'நெஸ்பீல்ட்' என்பவர் கூறுகின்றார். இந்துசமய சம்பிரதாயத்திற்கு உட்பட்டிருப்பது சாதி என்றும், இதற்கு வேறுபட்டிருந்தால் சாதிக்குப் புறம்பென்றும் கொள்ளப்பட்டன. மாட்டிறைச்சி உண்பது இந்துசமயத்தில் மிகக் கீழ்த்தரமாகக் கருதப்பட்டு வந்தது- மற்றைய எந்தவிதமான புலால் உண்டாலும் அது பாவமாகவே கருதப்பட்டு வந்தது. புலால் உண்பவர் புலையர் எனப்பட்டனர். உயர்ந்த சாதியினர் என்று கூறிக்கொள்பவரில் பலர் புலையராகவே மாறிவிட்டனர். புலையராக நினைக்கப்பட்டவரிற் பலர் பிராமணராகவே மாறிவிட்டனர். இவை மன[illegible]லும் செய[illegible]தவை. ஆகவே கோயிலுக்குள் ஹரிஜனர்களைச் செல்வ...

எல்லா மனிதர்களும் ஒன்று தான். இக் கருத்தை சங்ககாலப் புலவர்களே உணர்ந்துள்ளார்கள். கணியன் பூங்குன்றனர் என்னும் புலவரது பாடல் நாம் எல்லோருமே ஆழ்ந்துசிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

யாதும் ஊரே; யாவரும் கேளீர் என்றபாடலை நினைவுபடுத்தவேண்டும்.

எமக்கு எல்லாவூரும் சொந்த ஊர்தான்; எல்லா மக்களும் உறவினர் தாம், தீமையும் நன்மையும் பிறரால் வருவன அல்ல; துன்புறுவதும், துன்பம் தீர்வதுங்கூட அவைபோலத்தான்; சாவதும் புதிது அன்று.

இப் பாடலைப் போற்றாத தமிழ்ப்புலவர்கள் இல்லை. இப் பாடலைப் பாடி "உலக ஒற்றுமையை விரும்பியவன் தமிழன். உலகம் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வழிகாட்டியவன் தமிழன்" என்று புகழாத புலவர்கள் இல்லை.

இப் பாடலை நன்கு கற்றவர்கள்; மேடைகளிலே வீரமுழக்கம் செய்பவர்கள் இப் பாடலின் கருத்துக்கு மாறாக இனவேற்றுமை சாதிவேற்றுமை பாராட்டுவதை காணும்போது அறிஞர் உலகம் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

பாட்டுக்கு உருகும் மதுரைச் சொக்கநாதப்பெருமான் யாழ்ப்பாணரின் இசைக்கு உருகித் தொண்டர்களின் கனவிலேதோன்றி அவரைச் சந்திக்கு அழைத்துவருமாறு பணித்தாராம். திருவாரூர்ப் பெருமானும் யாழ்ப்பாணர் தம்மை நேரே தரிசிக்குமாறு வடதிசையில் ஒரு வாசலை வகுத்தருளினராம். இன்றிரவு தங்குவதற்கு யாழ்ப்பாணருக்கு ஓர் இடம் கொடுக்கவேண்டும்" என்று சம்பந்தர் சொன்னதும் திருநீல நக்கர் என்ற அந்தணர் தமது மனையின் நடுவிடத்திலேயே படுக்க இடம் கொடுத்தார். பெரியபுராணத்தில் காணப்படும் இச் [illegible]லிருந்தே திரு[illegible] சம்பந்தர் காலத்திலும் தீண்டாமையின் இன்னல் நாட்டிலே காணப்...

உலகிலுள்ள சிவன் கோவிலுக்கெல்லாம் சுழுமுனை நாடியிலே மூலமாக அமைந்த தலம் சிதம்பரமாகும். சிதம்பர தலப் ஹரிஜனர்களுக்கு உன்று திறந்துவிடப்பட்டதே அன்றே உலகிலுள்ள எல்லாத் தலங்களும் திறந்துவிடப்பட்டதற்குச் சமமாகும். யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமிகோவில் திறந்துவிடப்பட்டதன் பின்பு மற்றையவர்கள் பூட்டிவைத்திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. காசி விசுவநாதப் பெருமானை எல்லோரும் தொட்டுப் பூசிக்கலாம் என்றால் மற்றைய தலங்களின் உள்ளே சென்று வணங்குவதில் என்ன குறை வந்துவிடப் போகின்றது?

தீண்டாமை சைவத்தில் ஒரு சாபக்கேடானதாகும். இதனை நன்குணர்ந்த பெரியோர்கள் தீண்டாமை ஒன்று இருக்கக்கூடாது எனக் காலத்திற்குக் காலம் ஆணித்தரமாக மக்கள் மத்தியிலே கூறியுள்ளார்கள். இந்த அநாகரிகமான செயலினல் எதிர்கால சமூகம் இன்றைய சமுதாயத்தை மிகத் தாழ்வாக மதிக்கக் கூடும். ஆகவே ஹரிஜனர்கள் கேட்டுக் கோவில்களைத் திறந்துவிடுகின்ற நிலைக்குக் கொண்டுவராது, சைவாசார சீலர்களாகக் கோவிலுக்கு வருபவர்கள் எல்லோருக்கும் கோவிலில் கும்பிடுவதற்கு உரிமையுண்டு என்பதை மனதிற் கொண்டு ஆவன செய்வீர்களாக.



## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றும் ஓர் அரசாங்க ஊழியர் மிகவும் பொறுப்புவாய்ந்த ஓர் உத்தியோகம் வகிக்கிறார். பொதுமக்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளவேண்டியது அந்த உத்தியோகம் பலர் வருவதும் போவதுமாயிருப்பார்கள். டெலிபோனிலும் பேசுவார்கள்.

மிகவும் அத்தியாவசியமான ஒரு தொழிலுக்கு லைசென்ஸ் பெற வேண்டுமானல் அவருடைய சிபார்சை பெற வேண்டும் லைசென்ஸ் பெறுவதற்கு ஒரு குறிக்கப்பட்ட முறை இருக்கிறது. அந்த சட்டதிட்டங்களை மீறுவதற்கு அவர்விரும்புவதில்லை.

காலையில் ஓர் ஆசிரியப் பெண்மணி அவரிடம் இன்னெருவர் சார்பில் வக்காலத்து பேச வந்தார் அந்த அதிகாரியோ சட்டங்களை மீறி சலுகை செய்வதற்கு தமக்கு அதிகாரம் கிடையாது என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அந்த அம்மணியோ கேட்டபாடில்லை. தான் அப்படியாக்கும் இப்படியாக்கும் என்று மிரட்டினள் அதிகாரி ஒன்றுக்கும் பசியவில்லை. பைலை திறந்து சட்டங்களை வாசித்துக் காட்டியும் பயனளிக்கவில்லை. 'நீர் ஒரு முரட்டு மனிதர். மரியாதையாகப் பேசுகிறீரில்லை' என்றெல்லாம் அந்த அம்மணி ஆங்கிலத்தில் அவிழ்த்துக் கொட்டினள். அதிகாரி 'மிகவும் நன்றி' என்றார். அம்மணிக்கு ஆத்திரம் மிஞ்சிவிட்டது. 'நீர் வெறும் விசரன்' என்றாள் 'இருக்கலாம்' என்றார் ஊழியர். அரசாங்க அதிபராயிருந்த ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு 'அவர் இருந்தால் நான் உம்மை உடனே யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாக்கி விடுவேன்' என்றாள் அம்மணி 'அவர் இல்லாதது உங்கள் துரதிர்ஷ்டம்' என்று பதிலளித்தார் ஊழியர்.

அம்மணி உடனே மேலதிகாரி ஒருவரிடம் சென்றும் முறையிட்டுப் பார்த்தாள். அதுவும் பலனளிக்கவில்லை என்று பின்னர் தெரியவந்தது.

பொது சேவையில் ஈடுபட்டவர்கள் என்ற முறையில் அரசாங்க ஊழியரைக் கொண்டு எதுவும் செய்விக்கலாம் என்று நினைப்பது தவறு. அவர்கள் சட்டத்துக்கு மாறாக எதுவும் செய்தால் அவர்களுடைய உத்தியோகத்துக்கு பழுது வரும் என்பதை உணராத சிலர் அவர்கள்மீது வசைபுராணம் பாடுவது சரியில்லை.

அரசாங்க ஊழியர்களில் சிலர் சமயங்களில் மிலேச்சத்தனமாக நடந்து கொள்வது உண்மைதான். ஆனல் எல்லோரும் அப்படிப்பட்டவர்கள் அல்ல. அவர்களுடன் தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் நிதானமாக நடந்து கொண்டால் முறைப்படி எதையும்செய்து முடிக்கலாம்.

0 0 0

சமீபத்தில் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு சென்று திரும்பிய நமது பிரதமரும் தலைவர் நாஸரும் தாராளமாக மனம்விட்டு அளவளாவிக் கொண்டார்களாம். அவர்களுடைய சம்பாஷணையின்போது நாஸர் ஒரு சந்தர்ப்பத்தில் 'இரண்டு சிங்கங்கள் சண்டை பிடிக்கும்போது வால்கள்தான் மிஞ்சும்' என்றாராம். நமது பிரதமரும் விட்டுக் கொடுக்கவில்லை. 'இரண்டு யானைகள் சண்டை பிடிக்கும்போது புல்லுத்தான் நசுங்குப்படும். என்று மறுத்தான் விடுத்தார் டட்லி.

இவர்கள் எதைக் குறித்து இப்படிப் பரிபாஷையில் பேசிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரியுமா?

— வழிப்போக்கன்

## யு. என். பி. அரசின் சேவை பற்றி எம். பி

வேருவளை, செவ்வாய்

'முன்னைய அரசாங்கங்கள் தீர்வுகாணுததினல் தேங்கிக் கிடந்த எண்ணற்ற பல பிரச்னைகளுககுத் தேசிய அரசாங்கம் தீர்வுகண்டுள்ளது. இந்த அரசாங்கத்தின் முன்னேற்றமான நடவடிக்கைகளையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு கல்வி அமைச்சர் விஜயம் செய்திருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற் ... தால் மட்டும் போதாது செயலாற்றவும் வேண்டும்.

## ஆஸ்பத்திரி ஊழியர்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர்சண்முகநாதனை யாழ்ப்பாண மக்கள் எவ்வளவுக்குப்பாராட்ட முடியுமோ அவ்வளவுக்குப் பாராட்டினாலும் தகும் எந்தவிஷயத்தையும் உடனுக்குடன்செய்து முடிக்கும் துணிவும் ஆற்றலும் படைத்த அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் செய்துள்ளசீர்திருத்தங்கள்கொஞ்ச நஞ்சமல்ல. இந்த ஆஸ்பத்திரியை சில வருடங்களுக்கு முன்னர் பார்த்தவர்கள் இப்போது அந்த ஆஸ்பத்திரியைப் பார்த்தால் அவரது திறமையையும் சேவைமனப்பான்மையையும் தெரிந்து கொள்வது கஷ்டமல்ல.

நேற்று முன்தினம் சிகிச்சைபெறச் சென்ற ஓர் ஏழுவயதுச் சிறுமிக்கு தவறுன ஊசிமருந்து ஒன்றை ஏற்ற முயன்ற, கவனக்குறைவான மாணவ ஆண் தாதி ஒருவரையும் பிரதம தாதியையும் உடனடியாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுத்ததுடன் இனிமேலும் இவ்வித தவறுகள் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு எந்த நோயாளிக்கும் பிரதம தாதிகள் தான் ஊசிஏற்ற வேண்டுமென்றும்மாணவ தாதிகளுக்கு இந்தப் பொறுப்புக்கொடுக்கக் கூடாதென்றும் உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளிகள் நம்பிக்கையில்தான் செல்கின்றனர். நோயைக்குணப்படுத்துவார்கள் என்று நம்பிச்செல்லும் இந்த நோயாளிகள் விஷயத்தில் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் தமது கடமையையும் பொறுப்பையும்உணர்ந்து செயலாற்றவேண்டும். மனிதன் தவறு செய்வது இயல்புதானென்றாலும் உயிர் சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள பணியிலீடுபட்டிருக்கும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் கவனக்குறைவாக நடந்துகொண்டால் அதை ஆண்டவன் கூட மன்னிக்கமாட்டான். அந்தச்சிறுமிக்கு வேறு ஊசிமருந்து ஏற்றியிருந்தால் உயிரேபோயிருக்கக் கூடும் விஷயம் முடிந்தபின் விசாரணை நடைபெற்றிருக்கலாம். அதனால் என்ன பயன்? உடனுக்குடன் தகுந்த நடவடிக்கை எடுத்த வைத்திய அத்யட்சகரைப் பாராட்டவேண்டும். அதேசமயம் ஆஸ்பத்திரி ஊழியர்கள்தமதுபொறுப்பையும் கடமையையும் உணர்ந்துநடந்துகொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## பிரிட்டிஷ் நிபுணர் இலங்கை வருகிறார்

கோட்டை, செவ்.

பிரிட்டிஷ் கணக்காய்வியல் நிபுணர்களில் ஒருவரான திரு. ஏ. எச். ஹியட் விரைவில் இலங்கை வரவிருக்கிறார். இலங்கை போக்குவரத்துச் சபையில் அவர் இரண்டு வருட காலம்வரை ஆலோசகராகக் கடமையாற்றுவார்.

ஸாம்பியா வர்த்தக அமைச்சில் முன்னாள் விலைக்கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றிய திரு.ஹியட் கொழும்புத் திட்டத்தின்கீழ் பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சால் இங்கு அனுப்பப்படுகிறார். செலவின் கணக்குத்துறையில் இவர் இ. போ. ச.விற்கு ஆலோசனை கூறுவார். இ. போ. ச.வின் மத்திய, பிராந்திய போக்கு வரத்து செலவின திட்டங்களை உருவாக்குவதே இவரது பிரதான வேலைகளில் ஒன்ருக இருக்கும்.

1958-ம் ஆண்டு ஜனவரியில் இ. போ. ச. ஸ்தாபிக்கப்பட்டதென்பது தெரிந்ததே. 1957-ம் ஆண்டு லண்டன் போக்குவரத்து சபையைச் சேர்ந்த நிபுணர் குழுவொன்று இலங்கைக்குவந்து இ. போ. ச.வின் அமைப்பு, திட்டச்செயலாக்கம் போன்றன சம்பந்தமான ஆலோசனை கூறியதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்புத்திட்டத்தின்கீழும் இ. போ. ச. குறிப்பிடத்தக்க உதவிகளைப் பெற்றுவந்திருக்கிறது.

போவது இழிவாகக் கருதப்பட்டது. அதுவும் அரசாங்க வைத்தியசாலைகளைத் தருமாஸ்பத்திரி என்று கூறி இழிவாகக் கருதிய காலம். தந்தையார் காலத்திலே ஒரு வைத்தியரே எல்லா நோய்களுக்கும் வைத்தியம் செய்தார். இன்றே ஒரு நரம்பிற்கு விசேட டாக்டர். அன்று ஒரு புண்ணுக்குக் கத்தி வைப்பதே அவசியமற்றது எனக் கருதப்பட்டது. இன்றே ஊசி ஏற்றுவதும் சத்திரசிகிச்சையும் நாகரிகத்தின் உச்சநிலையாகக் கருதப்படுகிறது. பிறர் ஒருவரிடத்தில் இனமாகஒன்றைப் பெறுதல் அன்று அநாகரிகமாகக் கருதப்பட்டது. இன்று அரசாங்கத்திடமிருந்து தர்மச் சோறு, தர்மப் பணம், இனம் வாங்குதல் நாகரீகமாகக் கருதப்படுகின்றது.

இவை கலியுகத்தின் தர்மத்தை வெளிப்படுததுகின்றன. இதேபோலத்தான் சாதி தர்மத்திலும், சமய தர்மத்திலும் மக்கள் மிகக் கீழான நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இறைவன் ஒருவன், எல்லாம்வல்ல ஆண்டவன் ஒருவன், உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் பராபரன் ஒருவன், என்ற நம்பிக்கை உள்ளவர்கள்நெஞ்சத்திலே, எத்தகைய பேத உணர்ச்சியும் நுழையாது. நுழைந்தாலும் சிறிதுநேரங்கூடத் தங்காது; மின்னல் ஒளிபோல் உடனே மறைந்துபோகும்.

'ஒன்றே குலம்;
ஒருவனே தேவன்'

என்ற திருமந்திரம் உலகம் முழுவதும் பரவினுல் போதும். உலகில் இன்றுள்ள வெறுப்புணர்ச்சிகள் அனைத்தும் மறந்துபோய்விடும்.

எல்லா மனிதர்களுக்கும் பிறப்பு ஒரேமாதிரித்தான். ஆனால் அவரவர்கள் காரியம் செய்யும் திறமை வேறுபடுவதினுல் சிறப்புகள் ஒரே மாதிரியாகஇருக்கமாட்டா. இதனை வள்ளுவர் பெருமான்,

'பிறப்பொக்கு மெல்லா
வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை
யான்'

என்று குறிப்பிடுகின்றார். ஒருதொழிலை அவரவர் உள்ள உடல் வலிமைக்குத் தக்கபடி வெவ்வேறு திறமையுடன் செய்வார்கள். அந்தத் திறமைக்குத் தக்கபடிதான் சிறப்பும் கிடைக்கும். அந்த வெற்றிக்குத் தக்கபடி தான் சிறப்பும் கிடைக்கும். பிறப்பினுல் எல்லா மனிதர்களும் ஒத்தவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் அவரவர்கள் மனப்பெருமையினுற்

புலையராகவே மாறிவிட்டனர். புலையராக நினைக்கப்பட்டவரிற் பலர் பிராமணராகவே மாறிவிட்டனர். இவை மனஉயர்வு தாழ்வாலும் செயலாலும் நிகழ்ந்தவை. ஆகவே கோயிலுக்குள் ஹரிஜனர்களைச் செல்லவிடாது தடுத்தலில் எவ்விதமானபொருளும் இல்லை.

இதனைத் தடுக்கிறவர்கள் பக்தர்களுமல்ல; ஆசாரத்தில் உயர்ந்தவாகளுமல்லா. மலபரிபாகத்தில் உயர்ந்தவர்களுமல்ல. ஆலயப் பிரவேசத்தை விரும்புகிறவர்களிற் பலருடைய செயல்களில் அரசியற் காரணங்கள் பல மறைந்திருக்கின்றன. ஆலயப்பிரவேசத்தைத் தடுப்பவர்கள் எனது சகோதரன் கோவிலுக்குவெளியே நிற்கிறுன் என்ற உணர்வைப் பெறவேண்டும்.

கோயிலுக்கு வெளியேநிற்பவரும் தாம் உள்ளேபோகுமுன்பு, 'ஆண்டவன் வசிக்கும் திருக்கோயிலினுள்ளே போகின்றேன்' என்ற உணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். உள்ளே செல்பவர் அண்ணு. நான் தம்பி. அண்ணு அழைக்கிறபோது செல்வோம் என்ற மனேபாவமும் இருக்கவேண்டும். இரு பகுதியாரிடமும் இந்த மனேபாவம் வளர்ந்துவிட்டால் கோயில் கதவுகள் அடைத்திருக்க வேண்டிய அவசியமே இருக்காது. இவை எல்லாவற்றுக்கும் மூலகாரணம் அன்பே. கோயிலினுள்ளே செல்பவரைத் தடுப்பவரிடமும் அன்பு இல்லை. தடுப்பவரை மீறிக்கொண்டே செல்பவரைத் தடுப்பவரிடமும் அன்பு இல்லை. ஆகவே உலகிலுள்ள எந்தப் பிரச்னையை எடுத்தாலும் அவற்றுக்கு மூலகாரணம் சுயநலமும் அன்பில்லாமையும் என்றே கூறிவிடலாம். அன்பில்லாத இடந்தான் எது? இதனை அரசியல் வாதிகளும் சமூக சீர்திருத்தக்காரர்களும், பத்திரிகாசிரியர்களும் என்றைக்கு உணர்கிறார்களோ? அன்றைக்கே உலக விமோசனம். உலகம் ஒருகுடும்பம் என்ற மனேபாவம் மக்கள் உள்ளத்தில் பதியும்.

உலகிலே ஒற்றுமை நிலவ வேண்டும்; மனிதர்களுக்குள் இருக்கும் வெறுப்பும் பிரிவுகளும் ஒழிந்துபோக வேண்டும். எல்லா மக்களும் அன்புடன் ஒன்றுபட்டு வாழவேண்டும். மதத்தால் - மொழியால் - இனத்தால் நாட்டில் மனிதர்கள் பிரிந்துநிற்கும் நிலை மாறவேண்டும். மனிதர்கள் என்று எடுத்துக்கொண்டால்

தனார் தமது மனையின் நடுவிடத்திலேயே படுக்க இடம் கொடுத்தார். பெரியபுராணத்தில் காணப்படும் இச்செய்திகளிலிருந்தே திருஞானசம்பந்தர் காலத்திலும் தீண்டாமையின் இன்னல் நாட்டிலே காணப்பட்டது எனலாம்.

திருப்பாணர் காலத்திலும் நந்தனர் காலத்திலும் தீண்டாமையின் இன்னல் அதிக அளவில் இருந்ததாக ஊகிக்கப்படுகிறது. 'விலகிப்போ' என்று கூச்சலிட்டும் கற்களை எறிந்தும் திருப்பாணரைத் துரத்த முயன்றதாக வரும் கதைப் பகுதி அக்காலத்தில் தீண்டாதார் நிலைமையைக் காட்டுகிறது.

மகாத்மா போன்ற சமூக சீர்திருத்தவாதிகள் தீண்டாமைக்காகவே தமது வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளார்கள் சாதியைப் பற்றி காந்தி அடிகளார் கூறும் கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்குக.

மணிவாசகப்பெருமான் ''சாதி குலம் பிறப்பெண் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலிநாயேன்'' என்று தம்மையே நொந்துகொள்ளும் அளவுக்கு அவர் காலத்திலும் சாதியாகிய வியாதி இருந்திருக்கிறது.

''கௌதமர் வேதங்களின் ஆதிக்கத்தை மறுத்தார். வேதங்களை அல்ல. பிறப்பினுல் மட்டும் குலம் உயராது என்றார். யாகங்களில் உயிர்ப்பலியிடுவது தவறு என்று துணிவுடன் கூறினார். உங்களுக்குப் புலால் உணவு பிரியமாயிருந்தால் அதற்கு யாகாதி கிரியைகளின் ஆதாரத்தைத் காட்டவேண்டாம் என்று பண்டிதர்களிடம் கூறினார்.

உலகிலுள்ள ஆன்மக்கொடிகள் அனைத்தையும் உமாபதி சிவாச்சாரியார் இரண்டு பிரிவுக்குள் மாத்திரம் அடக்குகின்றார். இதுவரை முத்தியடைந்த ஆன்மாக்கள் ஒரு சாதி இனிமேல் முத்தியடையப் போகின்றவர்கள் இன்னெரு சாதி. இனிமேல் முத்தியடையப் போகின்றவர்களுக்குள் தாவரம் முதல் தேவர்கள் ஈருக எல்லாரும் அடங்குவார்கள் என்றால் மனிதருக்குள் மாத்திரம் எவ்வாறு சாதி வேற்றுமை இருக்கக்கூடும்.

உமாபதி சிவாச்சாரியார் பெற்றான் சாம்பான் என்ற திருக்குலத்தானுக்கும் முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்தார் என்றால் இதிலேயே இன்றைய சாதிக் கட்டுக்கோப்புகள் எல்லாம் அழிந்துவிடுவதைச் காண்கின்றோம்.



அல்வாய் பௌத்த பாடசாலையை வண. நந்தராம நாயக்க தேரோ ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் எடுக்கப்பட்ட படம். படப்பிடிப்பு ஏ. வி. எம்.

நாவாந்துறையில் நடந்தது

## மயானத்துக்கு அருகில் வடிசாராய உற்பத்தி

### நள்ளிரவில் பொலிஸ் வேட்டை

யாழ்ப்பாணம் 'புதன்

மயானத்துக்கருகில் வடிசாராயம் காய்ச்சிக் கொண்டிருந்தவர்களைக் கைதுசெய்யச் சென்ற பொலிசாருக்காக அங்கு வடிசாராய உற்பத்திப் பாத்திரங்களும் வடிக்கப்பட்ட சாராயமுமே காத்துக் கிடந்தனவாம்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 2-30 மணியளவில் நாவாந்துறையிலுள்ள முஸ்லிம் மையவாடிக்கருகில் நடைபெற்றதாம்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்தே இன்ஸ்பெக்டர் சின்னையா கான்ஸ்டபிள் 'இரத்தினம் தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டியினர் இப்பொருட்களை மயானத்துக்கருகில கிடந்துகைப்பற்றினர்.

விலையுயர்ந்த பீப்பாக்கள் பாத்திரங்கள் சுமார் 75 கலன் உற்பத்திப் பொருட்கள், சுமார் 10 போத்தல வடிசாராயம் ஆகியனவற்றையே பொலிசார் கைப்பற்றினர். சந்தேக நபர் இருவரைப் பொலிசார் தேடி வருகின்றனர். (கா, நி)

## 'பிரதமரின் ஐ.அ.கு. விஜயம் ஒரு தேர்தல் தந்திரம்'

### ஹபரதுவா எம். பி. கூறுகிறார்

காலி, செவ்வாய்

'பண்டாரநாயக்கா அரசாங்கம் அதிகாரத்திலிருந்தபோது அந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்கு நன்மைகள் பல செய்துள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி தனதாட்சிக் காலங்களில் முஸ்லிம் மக்களுக்கு என்ன செய்தது.

காலி, தலப்பிட்டியாவில் இஸ்லாமிய சோஷலிச முன்னணியின் ஆதரவில் நடைபெற்றகூட்டத்தில் உரைநிகழ்த்தியஇஸ்லாமிய சோஷலிஸமுன்னணித் தலைவர் அல்ஹாஜ்பதியுதீன்முகமது மேற்கண்டவாறு கேட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் பண்டாரநாயக்கா அரசாங்க காலத்தில் முஸ்லிம் மாணவர்கள் அதிகநன்மையை அடைந்தார்கள். அப்போது 85 முஸ்லிம் மகாவித்தியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் போதுதான் எனக்கு கல்வி அமைச்சர் பதவியும் கிடைத்தது. அப்பொழுது முஸ்லிம் பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூடங்கள் போன்ற பல வசதிகள் செய்துகொடுக்க வசதியாய் இருந்தது.

ஹபரதுவா ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு.பிறின்ஸ் குணசேகரா இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பெரும்பான்மை முஸ்லிம் மக்கள் ஆதரிக்கவில்லை. எனவே பிரதமரின் கெய்ரோ விஜயம் ஒரு தேர்தல் தந்திரமாகும். எனத் தெரிவித்தார்.

முன்னாள் வேருவளை ஆட்சிமன்ற அங்கத்தவர் ஜனுப் ஏ. காதர், காலி மாநகரசபை அங்கத்தவர் விஜேகுலசூரியா உட்படப் பலர் இக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்

[illegible] தேங்கிக் கிடந்த எண்ணற்ற பல பிரச்னைகளுக்குத் தேசிய அரசாங்கம் தீர்வுகண்டுள்ளது. இந்த அரசாங்கத்தின் முன்னேற்றமான நடவடிக்கைகளையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்'

பையகால பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக் காரியாலயத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் வேருவளை எம். பி. திரு, பகீர் மாஜர் மேற்கண்டவாறு கூறினார்,

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், 'சிறுபிரச்னைகளை அரசாங்கம் ஒத்திப் போட்டுவிட்டு நாட்டின் முன்னேற்றத்துக்காகப் பிரதான பிரச்னைகளுக்கு வெளிநாடுகளின்உதவியோடுதீர்வு காணுகிறது. குறிப்பாக வேலையில்லாப் பிரச்னைக்கு ஓரளவுக்கு அரசாங்கம்தீர்வு கண்டுள்ளது. இன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் அபிவிருத்தித்திட்டங்கள் பூர்த்தியானதும் இந்த வேலையில்லாப் பிரச்னையும் பூரணமாகத் தீர்க்கப்படலாம் எனத்தெரிவித்தார்.

## அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், புதன்

சங்கானை பால முருகன் நாடக மன்றத்தாரின் கன்னிப் படைப்பான ''என் தந்தை'' என்ற நாடகம் சங்கானை இலுப்பைத் தாழ் முருகமூர்த்தி கோவில் முன்றலில் சென்ற வாரம் அரங்கேற்றப் பட்டது. இன் நாடகத்தைப் பெரும் திரளான மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

## திருமலையில் மெதுவானவேலை

திருகோணமலை, செவ்.

திருகோணமலைத் துறைமுகத்தில் சீனக்குடாவிலிருந்து தேயிலை ஏற்றுமதியாகும் கரைத் தொழிலாளிகள் சென்ற மாதம் 19 ம் திகதியிலிருந்து கையாண்டு வரும் மெதுவான வேலை முறையின் காரனமாகஇங்கு இப்போது ஏற்றுமதிக்கு ஒரு கப்பலேனும் வரவில்லை. தற்போது இறக்குமதிக்கு மட்டும் ஒரே ஒரு கப்பல் வந்தள்ளது. இம்மாதம் ஏற்றுமதிக்கென வர விருந்த 14 கப்பல்கள் அத்தனையும் இங்கு வராவலே திருப்பி அனுப்பப்பட்டுள்ளன, இந்தத்தொழிலாளிகள் தாம் வழமையாகச் செய்யும் 56தொன் (காங் ஒன்றுக்கு) ஏற்றுமதிக்கு மேலாக ஒவ்வொரு தொன்னுக்கும் தலா 3ரூபா போனஸ் தரவேண்டும்எனக் கோரியே இந்த மெதுவான வேலை முறையில் இறங்கியுள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org